

வரணியூரானின்

# அசட்டு மாப்பிள்ளை

நகைச்சுவை நாடகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுவையின் வேடங்கள் சில...









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசட்டு மாப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசட்டு மாப்பிள்ளை

நகைச்சுவை நாடகம்

வரணியூரான்



மீள்பதிப்பு ஒழுங்கு
உடுவை எஸ். தில்லைநடராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு : அசட்டு மாப்பிள்ளை

எழுதியவர் : வரணியூரான்

வெளியீடு : எஸ். தில்லைநடராசா

அச்சு : குமரன் அச்சகம்
39, 36வது ஒழுங்கை, கொழும்பு 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

'அசட்டு மாப்பிள்ளை' நாடகம் 1975 இல் மேடையேற்றப்பட்டு அதே ஆண்டு நூலாகவும் வெளிவந்தது. அதற்கு முன்னர் அது வானொலியில் பல வாரங்களாக ஒலிபரப்பப்பட்ட பெருமைக்குமுரியது. இருபது ஆண்டுகளுக்குப் பிறகு இது இரண்டாவது பதிப்பாக வெளிவந்திருப்ப தோடு தற்போதும் பல இடங்களில் மேடையேறி வருவதும் குறிப்பிடத் தக்கது.

பொதுவாகச் சமூக நாடகங்கள் (ஒரு குறிப்பிட்ட கால பின்னணியை வைத்து எழுதப்படுவதால்) பல்லாண்டுகளுக்குப் பிறகு மேடையேற்ற முடியாத நிலை ஏற்பட்டு விடுகிறது. ஆனால் 'அசட்டு மாப்பிள்ளை' நாடகத்தைப் பொறுத்த மட்டில் இன்னும் பல வருடங்கள் கழித்து மேடையேற்றினாலும் மக்கள் வரவேற்பைப் பெறும் என்பதில் ஐய மில்லை. அதற்குப் பல காரணங்களை இங்கே குறிப்பிடலாம். எக் காலத்துக்கும் பொருத்தமுடைய கட்டுக்கோப்பான கதையமைப்பு மட்டுமல்ல, நாடக ஆரம்ப முதல் இறுதிவரை திருக்குறள் இழையோடு கின்றது. வலுவான கதாபாத்திரங்களை உள்ளடக்கிய நகைச்சுவை நாடகமாக அமைந்திருப்பதும் மற்றொரு காரணம்.

சில நாடகங்கள் படிப்பதற்குச் சுவையானதாக இருக்கும். ஆனால் நடிக்கும் போது அந்த ரசனை இருக்காது. வேறு சில நாடகங்கள் படிப்பதற்கு சுவாரஸ்யமாக இருக்காது, ஆனால் நடிக்கும் போது பிரமாதமாக அமைந்துவிடும். இந்த நாடகம், படித்தல், பார்த்தல், கேட்டல் ஆகிய மூன்று வகையிலும் சிறந்து விளங்குவது நாடக வெற்றிக்கான மற்றுமோர் சிறப்பம்சமாகும். இதனாற்றான் போலும் நூலாக வெளியிட்டும், மேடையேற்றுவதுடனும் மட்டும் நின்று விடாமல் இதை ஒலிப் பேழையாகவும் வெளியிட்டுள்ளார்கள். இதை ஒளிப்பேழை வடிவத்திலும் வெளியிட்டு வைத்தால் இதுவரை வேறு எந்த நாடகங்களுக்கும் கிடைக்காத பெருமை 'அசட்டு மாப்பிள்ளை'க்கு கிடைத்து விடுமென்று துணிந்து கூறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை, நாவல், கவிதை, நூல்கள் வெளிவருவதைப் போன்று நாடக நூல்களும் பெருமளவில் வெளிவர வேண்டும். இதுவே காலத்தின் இந்த வகையில் இந்நூலை இரண்டாவது வெளியீடாக வெளியீட்டுள்ள உதயம் பதிப்பகத்தாருக்கு எனது மனம் நிறைந்த பாராட்டுக்கள்.

**உடுவை எஸ். தில்லைநடராசா**

1994 (அரசாங்க அதிபர், வவுனியா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது கருத்து

உதயம் வெளியீட்டு வரிசையில் இது பதினை ஐந்தாவது வெளியீடு. வரணியூரானின் அசட்டு மாப்பிள்ளை நகைச்சுவை நாடக நூலை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றோம்.

வரணியைப் பிறப்பிடமாகக் கொண்டு வருமானவரித் திணைக் களத்தின் சிரேஷ்டவரி உத்தியோகத்தராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற திரு. எஸ்.எஸ். கணேசபிள்ளை வானொலி, தொலைக்காட்சி மேடை நாடகங்கள் பலவற்றை எழுதி நடித்துமுள்ளார்.

இவர் எழுதி வானொலியில் தொடராக ஒலிபரப்பப்பட்டு பின்னர் பல இடங்களில் மேடையேற்றப்பட்ட இந்நாடகத்தை கமலாலயம் கலைக்கழகத்தினர் நவம்பர் 1975 நூல் வடிவில் வெளியிட்டிருந்தனர். அவர்களுடைய அனுமதியுடன் அதன் இரண்டாவது பதிப்பை உதயம் வெளியிட்டுள்ளது. அண்மைக் காலங்களில் கொழும்பு, வவுனியா போன்ற இடங்களில் இந்நாடகம் வவுனியா அரசாங்க அதிபர் திரு.எஸ். தில்லைநடராஜா அவர்களின் ஆதரவில் மேடையேற்றப்பட்ட பொழுது பல ரசிகர்கள் இந்நூலை மறுபதிப்புச் செய்யும்படி அவரிடம் கேட்டி ருந்தார்கள். அதன் விளைவாகவே இந்நூல் மறுபிரசுரமாக வெளி வருகிறது. வவுனியாவில் இந்நாடகம் மேடையேற்றப்பட்ட பொழுது பிடிக்கப்பட்ட புகைப்படங்கள் அட்டையை அலங்கரிக்கின்றன.

இந்நூல் உதயத்தின் 7ஆவது ஆண்டின் மூன்றாவது நூல் என்பது குறிப்பிடத்தக்கது. வாசகர்களின் ஆதரவுடன் தொடர்ந்தும் பல நூல்கள் வெளிவரும்.

**உஷா சிவதாசன்**
ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

இந்நூலில் முதலாவது பதிப்பில் நான் எழுதிய முன்னுரையில் மேலும் பதிப்புகள் வெளிவரலாம் எனக் குறிப்பிட்டிருந்தேன். எனது எதிர் பார்ப்பு வீண்போகவில்லை. இருபது ஆண்டுகள் கழிந்தாலும் இரண் டாவது பதிப்பு வெளிவந்துவிட்டது. இதற்கெல்லாம் இரசிகர்களின் அசைக்க முடியாத ஆதரவுதான் காரணம் என்று துணிந்து கூறுவேன் முதலாவதாக வெளிவந்த வானொலி / மேடை நாடக நூல் என்ற பெருமையும் அசட்டு மாப்பிள்ளைக்கு உண்டு. முதலாவது ஒலி நாடாவாக வெளிவந்த பெருமையுமுண்டு. ஒளிப்பதிவு நாடாவாகவும் (வீடியோ) வெளிவந்து விட்டால் ஒரு சாதனை படைத்த நாடகமாக அசட்டு மாப்பிள்ளை திகழும் என்பதில் ஐயமில்லை.

முதல் பதிப்பில் இந்த நாடகம் உருவாக காரணமாக இருந்த காரணிகளைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன் குறிப்பாக யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்கார உரிமையாளர் ஒரு தீவிர திருக்குறள் பற்று மிக்கவர். ஒரு நாடகத்தை வானொலியில் தொடராக ஒலிபரப்ப வேண்டுமென்றும், அதன் முக்கிய தொனிப்பொருள் திருக்குறள் பரப்புவதாகவும் இருக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். வெறுமனே திருக்குறள் போதிக்கும் விதத்தில் நாடகத்தை அமைத்தால் அது வெறும் பிரச்சார நாடகமாகி விடுமென்பதால் வலுவான ஒரு கதையை அமைத்து அதற்குள்ளே திருக்குறள் போதனையையும் உள்ளடக்கி ஒரு பரிசோதனை நாடகமாகத்தான் எழுதினேன். பன்னி ரண்டு வாரங்கள் வானொலியில் ஒலிபரப்பாகி பலத்த பாராட்டுதல் களைப் பெற்றதால் பின்னர் அதை மேடையேற்றி அதிலும் வெற்றி கண்டோம். ஆரம்பத்தில் வானொலியிலும் மேடையிலும் நானே அசட்டு மாப்பிள்ளை பாத்திரத்தை ஏற்று நடித்தேன். இருபது ஆண்டு களுக்கு பின்பு தற்போது மேடையேறும் பொழுது அந்தப் பாத்திரத்தை (வயது முதிர்ச்சி காரணமாக) நான் ஏற்று நடித்தல் பொருத்தமாக அமையாது என்பதால் பென்சனியர் மார்க்கண்டர் பாத்திரத்தில் நடித்து வருகிறேன். கொழும்பு, மட்டக்களப்பு, வவுனியா, திருகோணமலை ஆகிய இடங்களில் மேடையேற ஏற்பாடாகியிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர் சிவதாசன் அவர்களே இந்த இரண்டாவது பதிப்பையும் வெளியிடுவது எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. அவருக்கு எனது நன்றிகள் பல.

சிறுவர்கள் நடிப்பதற்காக சிறு நாடகங்களின் தொகுப்பாக ஒரு நூலை வெளியிட வேண்டுமென்று எனது அவா. அதற்காக வாணிக் குட்டி என்ற ஒரு தொகுப்பைத் தயார்ப்படுத்திக் கொண்டிருக்கிறேன். விரைவில் வெளிவரும் என்ற செய்தியோடு விடை பெறுகின்றேன்.

வணக்கம்

அன்பன்
**எஸ்.எஸ். கணேசபிள்ளை**
34, பவுண்டின் ஹவுஸ் லேன்
கொழும்பு - 10

1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசட்டு மாப்பிள்ளை கதாபாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| மகாலிங்கம் | - | அசடன் போலப் பேசும் தன்மையுள்ள ஒரு முற்போக்கான இளைஞன். விவேகி; நேர்மைக் குணம் வாய்ந்தவன். |
| சிவப்பிரகாசம் | - | வள்ளல் தனமுடைய படித்த விவசாயி. ஐம்பது வயதைக் கடந்த ஒரு தமாஷ் பேர்வழி மகாலிங்கத்தின் தந்தை. |
| செல்லம்மா | - | சிவப்பிரகாசத்தாரின் மனைவி. எதையும் வெளிப்படையாகப் பேசும் சுபாவமுடையவர். நாற்பத்தைந்து வயது. |
| இராமலிங்கம் | - | செல்லம்மாவின் அண்ணன். முற்கோபி. ஐம்பது வயது. |
| கணேசன் | - | இராமலிங்கத்தின் மகன். நாகரீக, மோகங் கொண்ட, கெட்ட குணங்கள் அத்தனைக்கும் இருப்பிடமான இளைஞன். |
| பரமலிங்கம் | - | திருக்குறளைப் பரப்புவதையே தன் தலையாய கடனாகக் கொண்ட ஒரு பண்டிதர். நகைச்சுவைச் சுபாவம் கொண்ட முதியவர். |
| மார்க்கண்டர் | - | ஐம்பத்தைந்து வயதுடையவர். நாட்டுப் பற்றுமிக்கவர். ஆங்கிலத்தையே அடிக்கடி உபயோகிப்பவர். மலாயன் பென்சனியர். |
| மாலதி | - | மார்க்கண்டரின் ஒரே மகள். நல்ல அழகி; மகாலிங்கத்தின் காதலி. |
| சோமு | - | மார்க்கண்டர் வீட்டு வேலைக்காரன் வாழ்ந்து கெட்ட குடும்பத்தில் பிறந்தவன். அறிவுள்ளவன். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசட்டு மாப்பிள்ளை

## காட்சி 1

(காலை நேரம், சிவப்பிரகாசத்தாரின் வீடு. ஒரு மேசையும், இரண்டு நாற்காலிகளும் வைக்கப்பட்டிருக்கிறது. மகாலிங்கம் தலைகீழாக நிற்க முயற்சி பண்ணிக் கொண்டிருக்கிறான். பலமுறை திருப்பித் திருப்பி தலைகீழாக நிற்க முயன்றும் முடியவில்லை. அப்பொழுது சிவப்பிரகா சத்தார் நெற்றியில் திருநீற்றுப் பூச்சுடன் கைபனிவன் ஒன்றை அணிந்து கொண்டு மேடைக்கு வருகிறார்.)

சிவ : டேய், டேய், நாசமறுவானே இதென்னவேலையடா செய்யுறாய்.....

மகா : தேகாப்பியாசஞ் செய்யுறன்.

சிவ : ஏன் சாப்பிட்டது செமிக்கவோ.

மகா : இன்னும் நான் சாப்பிட இல்லை ஐயா.

சிவ : போடா, சரிக்குச்சரி வாய் காட்டிக்கொண்டிருக்காமல் கொம்மா ஏதும் அவிச்சு வைச்சிருப்பா, எடுத்து விழுங்கிப் போட்டு புத்தகத்தை எடுத்துப் படி.

மகா : நீங்கள் விழுங்கிப் போட்டியளே?

சிவ : நான் கொம்மா வந்தாப்போலை விழுங்கிறன்.

மகா : ஆர் அம்மாவையோ?

சிவ : வாய் காட்டாதையடா போடா.

மகா : நானும் அம்மா வந்தாப் போலை விழுங்கிறன்.

சிவ : அப்ப புத்தகத்தை எடுத்துப் படி.
(மகாலிங்கம் ஒரு கொப்பியை வைத்துப் படிக்கிறான்).

மகா : அன்னையும் பிதாவும் பின்னடிக்கிடைஞ்சல்
ஆலயம் தொழுவது வேலை மினைக்கேடு.

சிவா : டேய்.... டேய்.... இதென்னடா புதுப்பாடம் படிக்கிறாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகா : இது பள்ளிக்கூடத்திலை படிச்சுது.

சிவ : பள்ளிக்கூடத்திலை படிப்பிச்சவையோ..... எந்த வாத்தியடா படிப்பிச்சது.

மகா : வாத்தி படிப்பிக்க இல்லை... வைத்தி சொல்லித் தந்தது.

சிவ : வைத்தி இப்ப வாத்திவேலை பார்க்கிறானோ? எந்த வைத்தியடா?

மகா : ஹி! வைத்தியத் தெரியாதே. எங்கடை பள்ளிக்கூடத்திலை வைத்தியத் தெரியாதவை கிடையாது. வாகையடி முத்தை யாவின்ரைமோன். என்ரை வகுப்பிலை தான் படிக்கிறான். பெட்டையளுக்குக் கடிதம் எழுதி வாங்கிக் கட்டின வைத்தி.

சிவ : இந்த நாளையிலை இப்பிடித் தறுதலைகளைத்தான் எல்லாருக்கும் தெரியுது. அது சரியடா மகான் உனக்கு வெட்கமில்லையேடா?

மகா : இருக்கு.

சிவ : இருக்கோ?

மகா : ஓ அதுக்குத்தானே உடுப்புப் போட்டிருக்கிறன்.

சிவ : அன்னையும் பிதாவும் பின்னடிக்கிடைஞ்சல், ஆலயம் தொழுவது வேலை மினைக்கேடு எண்டு பேப்படிப்புப் படிக்க வெட்கமில்லையே.

மகா : ஹி! இது பேப்படிப்பே ஐயா நீங்களே சொல்லுங்கோ, உங்கடை அப்பு ஆச்சியவையாலை உங்களுக்குக் கரைச்சல் இருக்கேல்லையே. எங்கடை அப்பா, அதுதான் உங்கடை அப்பு சாகக்கிடக்கேக்கை நீங்கள் பட்ட கரைச்சல் எனக்குத் தெரியாதே. கோயிலுக்குப் போறது வேலை மினைக்கேடு இல்லையே.

சிவ : மடையா.... மடையா..... இதுக்குத் தானடா உன்னை எல்லாரும் மோடனெண்டு சொல்லுறாங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகா : அவங்கள் தான் மோடன்கள் ஐயா, அவள் மாலதியைக் கேட்டுப் பாருங்கோ நான் மோடனோ எண்டு.

சிவ : அதாரடா மாலதி.

மகா : என்ரை பெட்டை, தெரியாதே.... எங்கடை வகுப்பிலை மாலதி தானே வடிவான பெட்டை. ஐயா, எல்லாப் பொடியங்களுக்கும் அவளிலை ஒரு கண். ஆனால் மாலதிக்கு என்னிலை தான் இரண்டு கண்ணும். அவளுக்கு என்னைக் கலியாணம் கட்டத்தானாம் விருப்பம்.

சிவ : ஓகோ, அப்ப இதுதான் பள்ளிக்கூடத்திலை படிப்போ. டேய்.... உன்னை நாங்கள் எல்லாரும் ஒரு அப்பாவி எண்டு நினைச்சுக்கொண்டிருக்க, நீர் கலியாணம் கட்டப்போறீரோ?

மகா : ஏன் ஐயா, எனக்குக் கலியாணம் கட்டத் தெரியாதே. (சிவப்பிரகாசத்தின் மனைவி செல்லம்மா வருகிறாள்).

செல் : (வந்துகொண்டு) என்ன தகப்பனும் மகனும் கலியாணம் கட்டிற கதை கதைச்சுக் கொண்டிருக்கிறியள்.

மகா : (சிரித்தல்)

செல் : ஏன்ரா சிரிக்கிறாய்.

மகா : பின்னை தகப்பனும் மகனும் கலியாணம் கட்ட ஏலுமே?

செல் : என்ன கதையடா, கதைச்சனீங்கள்.

மகா : ஐயா கலியாணம் கட்ட இல்லையம்மா. நான் தான் கலியாணம் கட்டினால் என்ன எண்டு யோசிக்கிறன்.

செல் : ஆர் நீரோ?

மகா : என்ன நீரோ எண்டு ஒரு விதமாகக் கதைக்கியள் அம்மா. நானும் ஒரு ஆம்பிளை தானை.

செல் : பின்னை........ உமக்கு இப்ப கலியாணம் ஒண்டு தான் குறைச்சல். போடா, போய் புத்தகத்தை எடுத்துப்படி.

மகா : புத்தகத்தை எடுத்துப் படிச்சால் கண்ணுக்குள்ளை மாலதி தான் வந்து நிற்கிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல் : மாலதியோ, அதாரடா?

சிவ : இவன்ரை வகுப்பிலை படிக்கிற பெட்டையாம். இவனைத் தான் கலியாணம் முடிக்கப் போறன் எண்டு சொன்னாளாம்.

செல் : ஐயோ.... என்ரை பிள்ளையை எல்லாரும் பகிடி பண்ணுதுகள்.

மகா : பகிடி இல்லையம்மா, உண்மையாகத்தான். அவளுக்கு என்னிலை தானாம் விருப்பம்.

செல் : (பெருமூச்சுடன்) ஏன்ரா என்ரை வயித்திலை வந்து இப்பிடி அசடாய் பிறந்தாய்?

மகா : ஐயாவைக் கேளுங்கோ.

சிவ : செல்லம், அவன்ரை கதையை விட்டிட்டு, நீ இங்கை வா, எப்பன் தேத்தண்ணி போடு, (இருவரும் உள்ளே போக)

மகா : பாத்தீங்களே அம்மா, ஐயா கூப்பிட்ட உடனை என்னை விட்டிட்டு அவருக்குப் பின்னாலை போறீங்கள். மாலதி என்டால் என்னை விட்டிட்டு போவாளே.

செல் : (திரும்பிப் பார்த்து) உனக்கென்னடா விசர் பிடிச்சிட்டுதே?

மகா : இவ்வளவு நாளும் என்னை மோடனெண்டியள். மாலதி யைப் பற்றிச் சொன்னவுடனை விசரன் எண்டு சொல்லு றியள். நாளைக்கு நான் அவளை இங்கை கூட்டி வந்த பிறகு என்ன சொல்லப் போறியள் எண்டு பாப்பம்.

செல் : (திரும்பி வந்து) உமக்கு அப்பிடியும் ஒரு எண்ணமிருக்கோ. உமக்கு பின்னாலையும் ஒரு பெம்பிளை வருவாள் எண்டு நினைக்கிறீரே.

மகா : நான் ஏன் அப்பிடி நினைக்கிறன். எனக்கு முன்னாலை வரவேணுமெண்டெல்லோ நினைக்கிறன்.

செல் : என்னடா சொல்லுறாய் நீ.

மகா : எனக்குப் பின்னாலை மாலதியைக் கூட்டிக்கொண்டு வரமாட்டன். ஏனெண்டால் மாலதியிலை பெடியங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாருக்கும் ஒரு கண். அவள் பின்னாலை வந்தால் எல்லாப் பெடியங்களும் வந்து எனக்குத் தெரியாமல் கண்ணடிப்பாங்களெல்லே.

செல் : போடா........... போடா........

மகா : என்னை இப்ப எங்கை போகச் சொல்லுறியள்.

செல் : எங்கையெண்டாலும் போ. கண்ணுக்கு முன்னாலை நில்லாதை.

மகா : உப்பிடிச் சொன்னால் நான் மாலதி வீட்டுக்கே போயிடு வேன்.

செல் : இவன் சொல்லுறதைக் கேட்டியளே. நீங்கள் என்ன பார்த்துக் கொண்டு நிக்கிறியள்.

சிவ : என்னையும் கூடப் போகச் சொல்லுறியே.

செல் : என்னெண்டாலும் செய்யுங்கோ, என்ரை பிள்ளையை ஒரேயொரு ஆம்பிளைப்பிள்ளையை - நாசமாகாமல் பார்த்துக் கொள்ளுங்கோ.

சிவ : டேய் தம்பி, போடா, சொல்லுறதைக் கேளடா, சோதினை கிட்டுது. புத்தகத்தை எடுத்துப் படியடா.

மகா : எனக்குத் தெரியும்.

சிவ : என்னடா தெரியும்.

மகா : நானும் மாலதியும் தனிய நிண்டு கதைக்கிறது மாதிரி நீங்களும் அம்மாவும் நிண்டு கதைக்கப் போறீங்கள். அதுக்குத்தான் என்னைக் கலைக்கிறீங்கள்.

செல் : டேய்.... டேய்.... விசரா........ போடா........

மகா : அம்மா, நான் உங்களைக் குழப்பாமல் போறன். ஆனால் என்னை விசரனெண்டு சொன்னால் எனக்குக் கோபம் வரும் சொல்லிப்போட்டன். எனக்கென்ன விசரே. உங்க ளுக்குத்தான் விசர். ஐயாவுக்குத்தான் விசர் (வெளியே போகிறாள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ : செல்லம் நீ சொல்லுறமாதிரி, இதுக்கு ஏதாவது ஒரு வழி பண்ணாவிட்டால் இவனுக்கு உண்மையிலை விசர் பிடிச்சிடும். (பண்டிதர் உள்ளே நுழைகிறார்: செல்லம்மா உள்ளே போகிறாள்).

பண் : சிவப்பிரகாச வள்ளலே, உள்ளே வரலாமா?

சிவ : பண்டிதர் ஐயா வாருங்கோ..... வாருங்கோ..... நானே உங்களிட்டை வர இருந்தனான்.

பண் : காரணத்தை யாமறியலாமோ?

சிவ : அது ஒரு பெரிய விஷயம் பண்டிதர் ஐயா. இருங்கோ. உங்களிட்டைத்தான் யோசனை கேக்கவேணும்.

பண் : நல்லவை எல்லா அம் தீயவாம் தீயவும் நல்லவாம் செல்வம் செயற்கு

சிவ : பண்டிதரய்யா சொல்லுறது எனக்கொண்டும் விளங்க வில்லை.

பண் : அஃதாக்கப்பட்டது சிவப்பிரகாச வள்ளலே, விதியின் தன்மையால், செல்வத்தை ஆக்குவதற்கு நல்லவை எல்லாம் தீயவை அழிக்கும். தீயவை எல்லாம் நல்லவாய் ஆக்கும். தங்கள் துன்பம் எவ்வகைப்பட்டதோ?

சிவ : என்ரை மகன் மகாலிங்கத்தைப் பற்றித்தான் கவலை யாயிருக்கு.

பண் : வள்ளுவர் கூறியிருப்பதைச் சற்றே செவிமடும்வள்ளலே. தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து முந்தி இருப்பச் செயல். இதன் பொருள் புரிகின்றதோ.

சிவ : அவ்வளவுக்குப் புரிஞ்சால் ஏன் உங்களை யோசினை கேக்கிறன்.

பண் : வள்ளலே யாம் கூறும் புத்திமதியை நீவிர் ஏற்றுக் கொள்ளும்.

சிவ : சொல்லுங்கோ.

பண் : தினந்தோறும் குறள் ஒன்றைக் கற்றுக் கொள்ளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ : அதுக்கென்ன ஐயா, சொல்லித்தந்தால் படிக்கிறன்.

பண் : ஆகா, மகிழ்ந்தோம்.... மகிழ்ந்தோம். யாம் தற்பொழுது கூறிய குறளையே இன்று கற்றுக் கொள்ளும்.

சிவ : என்ன குறள் ஐயா.

பண் : தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து முந்திருப்பச் செயல் அஃதாகப்பட்டது, ஒரு தந்தையாகப்பட்டவன். தன் மைந்தனாகப்பட்டவனுக்கச் செய்யும் நன்றியானது கற்றோர் சபையிலே தம்மைவிட முந்தியிருக்குமாறு கல்வியுடையவனாக்குதல்.

சிவ : அதுக்காகத்தானே பண்டிதர் ஐயா அவனைப் பள்ளிக் கூடத்துக்கு அனுப்பி படிப்பிச்சுக் கொண்டிருக்கிறன்.

பண் : வேறு துன்பம் யாதோ?

சிவ : என்ரை மகன் ஒரு அப்பாவி - ஒரு அசடு எண்டு நாங்கள் நினைச்சுக் கொண்டிருக்கிறம். ஆனால் அவன் கல்யாணம் கட்டப்போறன் எண்டு நிக்கிறான். புத்தகத்தை எடுத்துப் படியடா எண்டால், மாலதி வந்து கண்ணுக்கை நிக்கிறாள் எண்டு சொல்லுறான்.

பண் : கல்வி கற்கச் சென்ற நும் மகன், காதல் வயப்பட்டு விட்டான் என்று இயம்புகின்றீர்.

சிவ : ஓம் ஐயா, குறுக்காலை போவான் இன்னும் மீசை கூடச் சரியாக முளைக்க இல்லை. (செல்லம்மா மோருடன் வெளியே வருகிறாள்) எல்லாம் தாய் குடுக்கிற செல்லம்.

செல் : என்னைப் பிழை சொல்லாட்டால் உங்களுக்கு விடியாது.

சிவ : நீ பொத்துவாய். குறுக்கை பேசாதை.
(செல்லம்மா மோரை வைத்துவிட்டுப் போகிறாள்)

பண் : சிவப்பிரகாச வள்ளலே, தன்னைத்தான் காக்கின் சினம் காக்க. காவாக்கால் தன்னையே கொல்லும் சினம் என்று வள்ளுவப் பெருந்தகை வாய்மொழியருளியிருக்கின்றார். அறிவீரோ. அஃதாகப்பட்டது உம்மை நீர் பாதுகாத்துக் கொள்ள விரும்பினால் முதலில் கோபத்தை அடக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். அன்றேல் அந்தக் கோபமே உம்மை அழிக்கும். சினம் காக்க... சினம் காக்க.

சிவ : நான் சினம் காக்க அவன் மாலதியைக் காக்கிறான். இதுக்கு உங்களை ஒரு யோசினை கேட்டால் நீங்கள் திருக்குறள் முழுவதையும் இண்டைக்கே எனக்கு படிப் பிக்கப் பாக்கிறியள்.

பண் : அல்ல அல்ல நீவிர் நினைப்பது சரியல்ல. நும் மகனை யாம் நல்வழிப்படுத்துவோம். நும் மகனின் சிந்தனையைக் கவர்ந்த அந்த ஏந்திழையாள் யாரோ? யாமறிதல் கூடுமோ?

சிவ : ஆரோ மாலதியாம் பண்டிதர்.... எனக்கும் சரியாகத் தெரியாது.

பண் : கவலையை விடுக. இளவயதினர் யாவருக்கும் ஏற்படு கின்ற இயற்கையான பைத்தியம் இது. தெளிய வைத்தால் குணமாகிவிடும்.

சிவ : நீங்கள் தான் தெளியவைக்க வேணும்.

பண் : மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் என் நோற்றான் கொல் எனும் சொல் என்ற குறளுக்கு நும் மகனை உதாரணமாக்கிக்காட்டுகின்றனம். புரிந்ததோ?

சிவ : (தனக்குள்) நீங்களும் விடுகிறதில்லையெண்டுதான் நிக்கிறியள். சொல்லுங்கோ.

பண் : ஒரு மகன் தந்தைக்குச் செய்யும் உதவியானது இவனு டைய தந்தை இவனைப் பெறுவதற்கு என்னதவம் செய்தானோ என்று மற்றவர்கள் பேசும்படி செய்வது. இப்பொழுது விளங்கிற்றோ?

சிவ : என்ரை மகன் அப்படி ஆக்களைப் பேசவைக்கப் போறானோ? முற்பிறப்பிலை என்ன பாவம் செய்து இந்த அசட்டுப் பிள்ளையை சிவப்பிரகாசத்தார் பெத்தாரோ எண்டுதான் ஊரெல்லாம் கதைக்கினம்.
(செல்லம்மா வந்துகொண்டே)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல் : அதுதான் பண்டிதர் ஐயா சொல்லிப் போட்டாரே. தான் திருத்தித் தாறன் எண்டு. பிறகேன் நீங்கள் திருப்பித் திருப்பிக் கதைக்கிறியள்.

சிவ : நீ என்னப்பா கூத்துக்குள்ளை கோமாளி மாதிரி, ஒவ் வொருக்காலும் ஒவ்வொண்டு சொல்லிக் கொண்டு நிக்கிறாய்.

செல் : என்னைப் பாக்க கோமாளி மாதிரித்தான் இப்ப தெரியும்.

பண் : அம்மையே, இந்த மனித வாழ்க்கையே ஒரு நாடகந் தானே. சினம் கொள்ளற்க.

(வெளியே ராமலிங்கம் அலறுகிறார். அவரைத் தொடர்ந்து மகாலிங்கம் உள்ளே நுழைகிறான்)

ராம : ஐயோ மச்சான், எடி தங்கைச்சி செல்லம்மா இவன் மகானைப் பிடியுங்கோ. என்னைக் கொல்லப்போறான். ஐயோ ஓடி வாருங்கோ....

பண் : (பயந்து) எம்மை மன்னியுங்கள். யாம் சென்று வரு கின்றனம். (போகிறார்).

செல் : அங்கை பாருங்கோ, அண்ணனை வெட்டுறத்துக்கு கத் தியோடை நிக்கிறான் மகான். ஓடிப்போய் பிடியுங்கோ.

மகா : கத்தியை விடுங்கோ மாமா......

ராம : விடமாட்டன்.

சிவ : டேய் மகான், என்னடாது இது.

ராம : எங்கையோ அசடாக வந்து பிறந்தாய்.

மகா : நான் அசடில்லை.

ராம : அப்ப ஏன் இப்பிடி நடக்கிறாய்?

மகா : ஏன் நான் நொண்டி நொண்டி நடக்கிறனே.

ராம : அதில்லை மருமோன், நான் இங்கை வாறபொழுது ஏன் கத்திக் கொண்டு ஓடி வந்தனி,

மகா : (சிரிக்கிறான்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராம : ஏன் மருமோன் இப்படி அசடு வழியச் சிரிக்கிறாய்.

மகா : நான் பூரான் வெட்டக் கத்தி எடுத்துக்கொண்டு வர நீங்கள் ஏன் பயந்தனீங்கள்.

ராம : அப்ப ஏன் கொம்மா ஐயோ அண்ணையை வெட்டப் போறானெண்டு கத்தினவ.

மகா : அதை அம்மாவையெல்லோ கேக்கவேணும். ஆறுதலாய் இருந்து அம்மாவைக்கேளுங்கோ, நான் பூரான் வெட்டிக் கொண்டு வாறன்.

ராம : இங்கை வா மருமோன்.

மகா : என்னை இனிமேல் மருமோன் எண்டு சொல்லப்படாது.

ராம : ஏன் மருமோன்.

மகா : பிறகும் மருமோன் எண்டு சொல்லுறீங்கள். கையிலை என்ன கிடக்கெண்டு தெரியுந்தானே. பனம்பூரான் வெட்டுறது மாதிரிப் பிளந்து போடுவன்.

ராம : அப்ப என்ரை மகள் கமலாவைக் கட்டமாட்டியே மருமோன்.

மகா : நானோ..... உங்கடை மகள் கமலா கரிக்குருவி மாதிரி. அவளை நான் கட்டுவேனே. நான் மல்லிகைப்பு மாதிரி வெள்ளையாய் இருக்கிற மாலதியைத்தான் கலியாணம் கட்டப் போறன்.

ராம : மருமோனுக்கு நல்லாய்த் தட்டிப்போட்டுது.

மாக : சொன்னனான்.... மருமோனெண்டு சொல்லவேண்டா மெண்டு. உங்களைச் சும்மா விடக்கூடாது. (கத்தியை ஓங்கியபடி மகாலிங்கம் ராமலிங்கத்தை வெருட்டுகிறான்).

ராம : ஐயோ, கொல்லுறான்.... கொல்லுறான்.... என்னைக் காப்பாற்றுங்கோ ......... ஐயோ.....

செல் : டேய்..... டேய்......கத்தியைக் கீழை போடடா. நீங்கள் என்ன பாத்துக்கொண்டு நிக்கிறீங்கள்.

சிவ : கூத்துப் பாக்கிறன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல் : டேய் மகான், ஏன்ரா மாமாவை வெட்ட ஓங்கிறாய்.

மகா : அவர் ஏன் என்னை மருமோன் எண்டு சொன்னவர்.

செல் : அவர் இண்டைக்கு நேற்றே அப்பிடிக் கூப்பிடுகிறார். நெடுகத்தானே கூப்பிடுகிறார்.

மகா : இனிமேல் அப்பிடிக் கூப்பிடவேண்டாமென்று சொல்லவும் பிறகுமேன் மருமோன் எண்டு கூப்பிடுகிறார்.

செல் : அவர் உன்ரை மாமா தானையடா, அப்பிடிக் கூப்பிட்டால் என்ன?

மகா : ஓ, அப்பிடிக் கூப்பிட்டுத்தான் அந்தப் பல்லிச்சியை அந்தக் கரிக்குருவியை எனக்கு கட்டிவைக்கப் பார்க்கிறார்.

செல் : நீ பெரிய வடிவேயடா?

மகா : மாலதியைக் கேட்டுப்பாருங்கோ.

செல் : என்னவாம் மாலதி?

மகா : நான் சினிமா நடிகன் மாதிரி நல்ல வடிவாம். தான் என்னைக் கலியாணம் கட்டாட்டால் நஞ்சு குடிச்சுச் செத்துப் போவாளாம்.

ராம : சிவப்பிரகாசம் மச்சான், சொல்லுறன் எண்டு குறை நினையாதையுங்கோ, பெடியனை ஆருக்கேன் ஒருக்கால் காட்டிப் பார்க்கிறதுதான் நல்லது.

மகா : ஏன் விசரெண்டோ, அங்கொடை ஆஸ்பத்திரிக்கு அனுப்புங்கோவன். (ராமலிங்கத்தைப் பார்த்து) இவ்வளவு நாளும் நான் உங்கடை மருமோன். நல்ல பிள்ளை, இப்ப மாலதியைக் கட்டப்போறன் எண்ட உடனை விசர்ப் பட்டம் கட்டப் பார்க்கிறியள் என்ன? உப்பிடி ஆட்கள் கனபேரை எனக்குத் தெரியும். கொஞ்சம் அவதானமாய்ப் பிளங் குங்கோ. நான் வாறன்.

சிவ : எங்கயடா போறாய் கத்தியோடை

மகா : பூரான் வெட்ட

சிவ : என்னத்துக்கடா பூரான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகா : தின்னத்தான். மாலதி சொன்னவள் தனக்குப் பூரான் எண்டால் நல்ல விருப்பமெண்டு (போகிறான்)

ராம : மெய்யே செல்லம், இதென்ன இவன் இப்ப புதிசாய் ஒரு மாலதி விசரிலை திரியிறான்.

செல் : அவளவை பெட்டையள் சும்மா இவனைப் பகிடி பண்ணுறதுக்காக உன்னைக் கட்டுறன் எண்டு சொல்லியிருப் பாளவை. இவன் அதைக் கேட்டுப்போட்டு.....

சிவ : எனக்கென்னவோ மச்சான் நீர் சொல்லுறமாதிரிக் கொஞ்சம் யோசினையாய்த் தானிருக்கு. மெய்யே மச்சான் அதார் அந்த மாலதி எண்ட பெட்டை. உமக்குத் தெரியுமே.

ராம : மாலதி அவள் பெரிய இடத்துப் பெட்டை. உங்களுக்கு ஏணி வைச்சாலும் எட்டாது.

சிவ : ஏன் அவ்வளவு உயரமான பெட்டையே?

ராம : பகிடி இல்லை மச்சான்.... மாலதி..... அவள் ஒரு பொல்லாத வால். எங்கடை மலாயன் பென்சனியரின்ரை மகள்.

சிவ : மெய்தானே, எங்கட மார்க்கண்டர். அவரை நான் கண்டு கதைக்கிறனே.

ராம : ஏன் கலியாணம் கட்டிவைக்கச் சொல்லியோ.

சிவ : கண்டிச்சு வைக்கச் சொல்லி.

செல் : ஏன் அண்ணை, உன்ரை மோன் கணேசன் கண்டபடி திரியிறானாம். எங்கேயெண்டாலும் ஒரு வேலையிலை கொழுவி விடாதயன்.

ராம : வேலை என்ன கடைத்தெருவில் விக்கிற சாமானே வாங்கிக் கொழுவி விட.

சிவ : சரி அண்ணனும் தங்கச்சியும் இருந்து கதையுங்கோ. ஒருக்கால் வெளியில போட்டு வாறன்.

ராம : இல்லை மச்சான், எனக்கு இருக்க நேரமில்லை. நானும் வாறன்.

(இருவரும் வெளியே போகின்றனர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காட்சி 2**

(பென்சனியர் மார்க்கண்டர் வீடு. பென்சனியர் பட்டிக்சாறம், பிஜாமா கோட் அணிந்திருக்கிறார். மூக்குக்கண்ணாடி சகிதம் ஒரு சாய்வு நாற்காலியில் அமர்ந்திருக்கிறார். தலை முற்றாக நரைத்திருக்கிறது. வாயில் சுங்கான் புகைந்து கொண்டிருக்கிறது. மார்க்கண்டார் பெரிய பணக்காரர் என்பதை எடுத்துக்காட்டும் வகையில் அந்த அறை தளபாடங்களினால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றது. ரீபோய் ஒன்றில் சாராயப் போத்தலும் கிளாசும் வைக்கப்பட்டிருக்கிறது.)

மார் : சோமு..... சோமு... டேய் சோமு இங்கை வாடா.

சோமு : (உள்ளேயிருந்து) ஐயா ஒருக்கால் இங்கை வந்திட்டுப் போங்கோ.

மார் : ஏன்ரா சோமு, நீ எனக்கு வேலைக்காரனோ இல்லை நான் உனக்கு வேலைக்காரனோ?

சோமு : ஐயா அதுகளைப் பற்றிப் பிறகு கதைப்பம். இப்ப நீங்கள் உடனை வரப்போறியளோ இல்லையோ.

மார் : எனக்கு ஓடர் போடுகிறான். நீ வாடா இங்கை.

சோமு : ஐயா நீங்கள் வாருங்கோ.

மார் : வட் இஸ் றோங் வித் திஸ் பெலோ.
(எழுந்து உள்ளே போகிறார்)
(உள்ளே) என்னடா இது கோலம்.

சோமு : எனக்கு கண் முழிக்க முடியாமல் இருக்கிறது ஐயா. முகத்தை துடைச்சு விடுங்கோ (இருவரும் வெளியே வருகின்றனர். சோமுவின் தலை, முகம் முழுவதும் பவுடரினால் வெண்மையாக்கப்பட்டிருக்கிறது).

மார் : சோமு என்னடா செய்தனி (சிரிக்கிறார்)

சோமு : ஐயா, அலுமாரிக்கு மேலை மாடின் வச்சிருந்திது. இண்டைக்குப் புட்டு அவிக்கச் சொல்லி மாலதி தங்கச்சி சொல்லிச்சுது. எனக்கு எட்ட இல்லை. தடியால தட்டினன், அது தலைக்குமேல் விழுந்து கொட்டுப்பட்டுப் போச்சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார் : யு லுக் ஏ பபுன் நவ். அசல் கோமாளி மாதிரி இருக்கிறாய். முகத்தைத் துடையடா.

சோமு : ஐயா, நான் போய் குளிச்சிட்டு வாறன்.

மார் : டேய் சோமு, இங்கை வாடா, இதிலை கொஞ்சம் அடி.

சோமு : வேண்டாம் ஐயா.

மார் : வெக்கப்படாதையடா என்னட்டைப் பணம் இருக்கலாம். ஆனால் நான் உயர்வு தாழ்வு பாக்கிறதில்லை. நீயும் மனுசன்தான். நானும் மனிசன் தான். எல்லோரும் சமம்.... குடி.....

சோமு : ஐயா சாப்பிட வழியில்லாமல் இருந்த எனக்கு வேலையும் குடுத்து உங்கடை பிள்ளைமாதிரி நடத்துறியள். அந்த நன்றியை நான் மறக்கமாட்டடன். இது துரோகம் ஐயா.

மார் : சோமு, நீ வேண்டாமெண்டால் விடு. வற்புறுத்த மாட்டன். ஆனால் எனக்குத் தெரியாமல் இந்தப் பழக்கத்தை நீ பழகக்கூடாது.

சோமு : ஐயா பெத்த தகப்பன் மாதிரிநினைச்சு சொல்லுறன். நான் இங்கை வேலைக்கு வந்த நாளிலை இருந்தே கவனிச்சுக் கொண்டு வாறன் நீங்கள் ஒரு தெய்வம் மாதிரி.

மார் : சோமு டேய் கனக்கப் புகழாதை. எனக்கு முகஸ்துதி பிடியாது.

சோமு : ஐயா முகஸ்துதி இல்லை. நீங்கள் எனக்கு தாற அளவுக்கு மீறின சுதந்திரத்தை வைச்சுக்கொண்டு சொல்லுறன். உங்களிலை ஒரு கெட்ட பழக்கத்தையும் என்னாலை காணமுடிய இல்லை. ஆனால் இந்தக் குடிப்பழக்கத்துக்கு மட்டும் அடிமையாகி விட்டீங்கள். இதை நிற்பாட்டவே மாட்டீங்களா?

மார் : சோமு எனக்குப் புத்தி சொல்லுற அளவுக்கு வந்திட்டியா?

சோமு : என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ ஐயா நீங்கள் அளவோடை தான் குடிக்கிறீங்கள். ஆனால்.... (அழுகிறான்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார் : சோமு, ஏன்ரா அழுகிறாய்?

சோமு : ஐயா, நாங்களும் வசதியான குடும்பத்திலை இருந்த னாங்கள். ஆனால் என்னைப் பெத்த தகப்பன் இந்தக் குடிக்கு அடிமையாகி, எங்கடை சொத்து சுகம் எல்லாம் அழிஞ்சு போச்சு. ஏக்கத்திலை என்ரை அம்மா உயிரை விட்டா, அப்பவும் என்னுடைய தகப்பன் குடியை விட இல்லை. கடைசியிலை, இந்தக் குடியே அவருடைய உயிரையும் குடிச்சு இண்டைக்கு என்னையும் அனாதை யாக்கிப் போட்டுது.

மார் : புவர் போய் சோமு, நீ அனாதை இல்லையடா சில தவறுகளை நாங்கள் தவறெண்டு நினைச்சுக்கொண்டு தான் செய்யுறம். ஆனால் தவிர்க்க முடியுறதில்லை.

சோமு : நான் தெரியாத்தனமாகச் சொல்லியிருந்தால் என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கள்.

மார் : நோ நொட் அற் ஓல். உன்னிலை பிழை இல்லை. எனக்குத் தெரியும் சோமு, குடிக்கிறது பிழையெண்டு. ஆனால் இளவயதிலேயே என்னுடைய மனைவியைப் பிரிஞ்சு நான் இந்தப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டன். தவிர்க்க முடியவில்லை.

சோமு : ஐயா, நான் உங்களைச் சொல்ல இல்லை. இந்த மனித மனமே விசித்திரமானது. சந்தோஷம் வந்தாலும் குடிக் கிறான். துன்பம் வந்தாலும் குடிக்கிறான்.

மார் : யு ஆர் றைட். ஆனால் அதெல்லாம் வெறும் சைக் கோலஜி. எங்களை நாங்களே ஏமாத்திக் கொள்ளுற சந்தர்ப்பவாதம். டேய் சோமு நீ ஒரு அறிவுள்ள பிள்ளை. உன்னுடைய இந்தச் சின்ன ஆசையையாவது நான் நிறைவேற்ற வேணும்.
(சாராயப் போத்தலை எடுத்து கவிழ்த்து ஊற்றுகிறார்)

சோமு : ஐயா, என்னய்யா இது.

மார் : இண்டையிலிருந்து நான் குடிக்கமாட்டன். இது சத்தியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோமு : நீங்கள் தெய்வம் ஐயா.
(மார்க்கண்டரின் காலில் விழுந்து சோமு வணங்குகிறான்)
(பண்டிதர் வெளியிலிருந்தவாறே)

பண் : மார்க்கண்டு ஐயா.... மார்க்கண்டு ஐயா....

மார் : (மெதுவாக) சோமு, இந்தப் போத்தலை உள்ளே கொண்டு போ.
ஹூ இஸ் தட்... கம் இன்.
(சோமு போத்தலுடன் உள்ளே போகிறான்)

பண் : வணக்கம்

மார் : யேஸ்...... ரேக் யுவர் சீட்.
(பண்டிதர் ஆங்கிலம் தெரியாது விழிக்கின்றார்) இருங்கோ.

பண் : நன்றி. எம் நாமம் பரமலிங்கம். பண்டிதர் பரமலிங்கம் என்றால் பலரும் அறிவர் எம்மை.

மார் : நானும் கேள்விப்பட்டிருக்கிறன். இண்டைக்குத் தான் நேரிலை பார்க்கிறன் கிளாட் ரு மீட் யு மிஸ்டர் பண்டிட்.

பண் : திருக்குறள் போதிப்பதையே எம் தலையாய கடனாக ஏற்றுக் கொண்டுள்ளோம். நும் போன்றவர்களுடைய உதவியும், ஒத்தாசையும் இப்பணிக்கு எமக்குத் தேவை.

மார் : அப்பிடியா, வெறி குட், நான் என்ன செய்ய வேணும்.

பண் : திருக்குறளை தரணியெல்லாம் பரப்ப வகை செய்ய வேண்டும். உலகத்தில் 90 மொழிகளிலே எம்பெருமான் வள்ளுவனின் குறட்பாக்கள் மொழியெர்க்கப்பட்டிருக் கின்றன.

மார் : ஹூ இஸ் தட் வள்ளுவன்.

பண் : ஐயகோ, தமிழின்றி வேறு மொழியறியும் பாக்கியம் பெற்றிலம்.

மார் : ஓ, சொறி மிஸ்டர் பண்டிட். வள்ளுவன் எண்டது ஆர்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண் : வெட்கம்.... வெட்கம் வேதனையடைகின்றோம். வேற்று மொழியாளரும் ஏற்றிப் போற்றும் வள்ளுவனை யாரென்று வினாவி விட்டீர்.

மார் : பண்டிட் ஐயா. எக்ஸ்கியுஸ்மீ......

பண் : தமிழாக்கம்

மார் : மன்னிக்க வேணும். வள்ளுவனை ஆரெண்டு தெரிஞ்சால் நான் ஏன் உம்மைக் கேக்கிறன்.

பண் : தமிழனாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் தெரிஞ்சிருக்க வேண்டிய ஒரு தமிழ்ப்புலவன் வள்ளுவன்.

மார் : ஐ..... சீ.....

பண் : ஔவையாரைப் பற்றிக் கேள்விப்பட்டதுண்டா?

மார் : சின்ன வயதிலை படிச்ச ஞாபகம்.

பண் : அந்த ஔவையாரின் உடன் பிறப்புத்தான் திருவள்ளுவர். திருவள்ளுவர் இயற்றிய நூலின் பெயர் தான் திருக்குறள்.

மார் : இஸ் இட் ஏ ஸ்டோரி புக்.... அதாவது கதைப் புஸ்தகமா?

பண் : சட்ட நூல்

மார் : ஓ, லோ புக். அப்ப வள்ளுவர் அட்வகேற்றாக - அதாவது சட்டத்தரணியாக இருந்தவரோ?

பண் : உங்கள் அறியாமைக்காக வருந்துகின்றனம். திருவள்ளுவர் உலக இயலைப் பற்றி எழுதிய நூல் தான் திருக்குறள். இந்த நூலைப் பற்றி ஔவையார் என்ன கூறுகின்றார் தெரியுமா?

மார் : தெரியாது பண்டிட் ஐயா.

பண் : அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டி குறுகத் தறித்த குறள் என்றார். விளங்குகின்றதோ?

மார் : சாடையாக விளங்குது.

பண் : நன்று மகிழ்ந்தோம். திருக்குறளைப் பற்றி போற்றிப் பாடிய புலவர்களை அறிவீரோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார் : ஊஹூம்... அறியோம்.

பண் : இறையனார், உக்கிரப் பெருவழுதியார், கபிலர், பரணர், நக்கீரர், மாமூலனார், கல்லாடர், சீத்தலைச்சாத்தனார், அடிசில் கிளார், தொடித்தலை விழுத்தண்டினார், மாங்குடி மருதனார்.....

மார் : (அவசரமாக) பண்டிட் ஐயா.... பண்டிட் ஐயா.... இவர்களில் ஒருத்தரக் கூட எனக்குத் தெரியாது. பை த பை, இந்த லிஸ்ட் இப்ப வேண்டாம். இப்ப என்ன குடிக்கிறீங்கள் கூலா ஹொட்டா?

பண் : அமுதபானமன்றோ கூழ். கூழுக்குப் பாடிய புலவரை அறிவீரோ?

மார் : சரியாய்ப் போச்சு. மிஸ்டர் பண்டிட் ஐயா. கூழ் இல்லை. குளிர்பானமா? சூடான தேநீரா? எண்டு கேட்டனான்.

பண் : வெப்பம் தகிப்பதால் குளிர்பானமே சிறப்புடைத்து,

மார் : சோமு.... சோமு.... பிரிட்ஜிலை ஒரு ஒறேஞ் பார்லி எடுத்துக்கொண்டு வா.
(மாலதி புத்தகங்களுடன் வெளியிலிருந்து உள்ளே வருகிறாள்).
மாலதி சென்ட் சம் கூல் டிறிங்க்ஸ்
(மாலதி தலையாட்டிவிட்டு உள்ளே போகிறாள்.)

பண் : நும் போன்று இன்னும் பலர் வள்ளுவன் குறளறியாது இருக்கின்றனர். அவர்களுக்கெல்லாம் திருக்குறள் போதிப்பான் வேண்டி எம் ஆயுளையே அர்ப்பணிக்க ஆயத்தமாகி விட்டோம்.
(சோமு குளிர் பானத்துடன் வருகிறான்)

மார் : குளிர் பானத்தைக் குடியுங்கோ, மிஸ்டர் பண்டிட் என்னுடைய மகள் மாலதி தமிழ்ப்பாடத்திலை கொஞ்சம் வீக். நீங்கள் வந்து கொஞ்சம் டியுசன் கொடுக்க முடியுமா....?

பண் : மகிழ்ச்சியுடன் இப்பணியை ஏற்றுக்கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார் : இந்த நாளையிலை எல்லாப் பாடத்துக்கும் டியுசன் குடுக்க வேண்டியிருக்கு. பள்ளிக்கூடங்களிலை விளங்காத பாடங் களைத் திருப்பிக் கேட்டால் டியுசன் கிளாசுக்கு வாருங்கோ எண்டு வாத்திமாரே சொல்லுகினமாம். மாலதி..... மாலதி.

மாலதி : (உள்ளே) யேஸ் டடி.

மார் : கம் ஹியர் (மாலதி வருகிறாள்)

என் ஒரே மகள். மாலதி, மாலதி இவர் பண்டிதர் பரம லிங்கம் ஐயா. உனக்கு இனிமேல் தமிழ்ப்பாடத் திலை டியுசன் சொல்லித்தருவார்.

பண் : மார்க்கண்டு ஐயா அவர்களே மாலதி என்னும் இந்த மங்கை நல்லாள் ஒரு காலத்தில் வாசுகிபோல் வாழ்ந்து காட்டுவாள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

மாலதி : தாங்க்ஸ் ஐயா (உள்ளே போகிறாள்)

(வெளியிலிருந்து சிவப்பிரகாசம் கூப்பிடுகிறார்)

சிவ : வீட்டுக்காரர்.... வீட்டுக்காரர்....

மார் : யாரது? ஹு இஸ் தற்?

பண் : சிவப்பிரகாச வள்ளலின் குரல் போன்று இருக்கின்றதே.

மார் : உள்ளே வரலாம்... கம் இன்.... கம் இன். யு ஆர் மிஸ்டர்.

சிவ : சிவப்பிரகாசம்

மார் : ஐ ஆம் மார்க்கண்டு.... சம் மோர்.... கூல் டிறிங்க்ஸ்

சிவ : வேண்டாம்.... வேண்டாம்....

மார் : சரி வந்த விஷயம் என்ன.....?

(மாலதி குளிர் பானத்துடன் வருகிறாள்)

சிவ : (தனக்குள்) இவள் தான் அந்த மாலதியோ, பெட்டை நல்ல வடிவாகத் தானிருக்கிறாள்.

மார் : என்ன மிஸ்டர் சிவப்பிரகாசம், உம்மடை பாட்டிலை யோசிக்கிறீர். வட் இஸ் த மாட்டர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ : வந்து.... ஒண்டுமில்லைப் பாருங்கோ... இவ வந்து உங்கடை மகள் தானோ?

மார் : ஒரேமகள்.

சிவ : என்ன பண்டிதர் ஐயா, பேசாமல் இருக்கிறியள்.

பண் : நீவிர் பேசுகின்றீர். யாம் மௌனமாக இருக்கின்றோம். பிரத்தியேகமானால் யாம் சற்றே வெளியே சென்று வருகின்றோம்.

சிவ : பிரத்தியேகம் ஒண்டுமில்லை. நீங்கள் இருங்கோ மிஸ்டர் மார்க்கண்டர். உங்கடை மகளோடை தான் என்ரை மகனும் படிக்கிறான்.

(மாலதி சிவப்பிரகாசத்தைக் கவனமாகப் பார்த்துவிட்டு உள்ளே போகிறாள்).

மார் : இஸ் தற் சோ.... புறசீட்.....

சிவ : என்ரை மகன் பாருங்கோ ஒரு அப்பாவி. ஒரு சோலி சுறட்டுக்குப் போகாத ஆள்.

மார் : தற் இஸ் வெறி குட்.... பை தபை.... வட் இஸ் ஹிஸ் நேம். என்ன பேர்?

சிவ : பேர் மகாலிங்கம். நாங்கள் மகான் எண்டுதான் கூப்பிடுகிறது.

பண் : ஒரு காலத்தில் நும் மகன் ஒரு மகனாகவே வருவான் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

மார் : ஓல் றயிட் இப்ப அவனுக்கு என்ன?

சிவ : அவனுக்கு ஒண்டுமில்லை... அவன் ஒரு அப்பாவி

மார் : யேஸ் யேஸ் சொல்லும்.

சிவ : அவனை உங்கடை மகள் மாலதி வந்து....

மார் : விழுங்காமல் சொல்லும் எனி லவ் அபெயர்ஸ்....

சிவ : அதெனக்குச் சரியாகச் சொல்லத் தெரிய இல்லை. ஆனால் இவ அவனைக் கலியாணம் கட்டுறதாகச் சொல்லியிருக் கிறாவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண் : பருவக் கோளாறு.

மார் : மை கோட்.... பிறகு... பிறகு....?

சிவ : பிறகென்ன.... இப்ப அவன் எந்த நேரமும் மாலதி மாலதி எண்டுகொண்டு திரியிறான். அதுதான் என்ன விஷயம் எண்டு விசாரிச்சுக்கொண்டு போகலாமெண்டு வந்தநான்.

மார் : (உரத்து) மாலதி.... மாலதி...

சிவ : சச்சச்ச நீங்கள் இப்ப ஒண்டும் அவசரப்பட்டுக் கூப் பிட்டுக் கேளாதையுங்கோ. நாங்கள் போனாப்பிறகு கதையோட கதையாக விசாரிச்சுப் பாருங்கோ...

மார் : நோ... நோ... நோ.... இப்பவே கூப்பிட்டுக் கேக்கப் போறன் (கோபமாக) மாலதி .... மாலதி....

பண் : மார்க்கண்டு ஐயா அவர்களே சமயம் நன்றல்ல. யாம் புறப்படுகின்றோம். நாளை தொடக்கம் நும் புத்திரிக்குப் பாடத்தை ஆரம்பிப்போம். விடை தருக.

சிவ : (சற்றே பயந்து) நானும் பண்டிதர் ஐயாவோடை போட்டு வாறன்.

மார் : போங்கோ எல்லாரும் போங்கோ... மாலதி... கம் ஹியர் (பண்டிதரும் சிவப்பிரகாசமும் வெளியேறுகின்றனர்)

மாலதி : (சிரிக்கிறாள்)

மார் : ஸ்டொப் தற் லாப். சிரிக்காதை.

மாலதி : சிரிக்காமல் என்ன டடி செய்யிறது. மிஸ்டர் சிவப்பிரகாசம் சொன்னது எல்லாத்தையும் நானும் கேட்டுக் கொண்டு தானிருந்தனான்.

மார் : அவர் சொன்னதெல்லாம் உண்மைதானா?

மாலதி : நூற்றுக்கு நூறு உண்மை.

மார் : ஸ்டொப் இற், எனக்கு முன்னாலை இப்பிடிச் சொல்ல உனக்கு வெட்கமில்லையா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலதி : இதிலை என்ன வெட்கம் டடி. நான் சொல்லுறது முழு வதையும் கேக்காமல் நீங்கள் கோவிச்சால் எப்படி டடி, மிஸ்டர் சிவப்பிரகாசம் என்ன அந்த மகாலிங்கம் இல்லா விட்டால் எனக்குப் பொழுதே போகாது.

மார் : (கோபமாக) மாலதி வட் ஆர் யு ரோக்கிங்? ரூ ஹூம் ஆர் யு ரோக்கிங்... வித் யுவர் பாதர் அண்டர்ஸ் ராண்ட்.

மாலதி : (சிரித்து) ஏன் டடி இப்பிடிக் கோபப்படுறீங்கள். நான் உண்மையைத் தான் சொல்லுறன்.

மார் : நீ மகாலிங்கத்தை கலியாணம் கட்டுவன் எண்டு சொன்னது உண்மையா. இஸ் இற்றூ?

மாலதி : ஒப் கோர்ஸ்.... டடி, அந்த மகாலிங்கம் ஒரு லூஸ் டடி, அதினாலை நாங்கள் எல்லாக் கேர்ள்ஸ்ஸும் சேர்ந்து உங்களைத்தான் கலியாணம் கட்டுவம் எண்டு வேடிக்கை பண்ணுவம்.

மார் : லூஸ் கேசுகளையெல்லாம் ஏன் ஸ்கூலிலை அட்மிட் பண்ணுறாங்கள்?

மாலதி : ஆனால் மகாலிங்கம் படிப்பிலை கெட்டிக்காறன் டடி. வகுப்பிலை எப்பவுமே அவர்தான் முதலாம் ஆள்.

மார் : தென் வட் இஸ் றோங் வித் ஹிம்?

மாலதி : அதை எப்படி நான் சொல்லுறது. நீங்கள் ஒருநாளைக்கு நேரிலை கண்டால் தான் நம்புவீங்கள்.

மார் : எனிவே மாலதி, இந்த மாதிரி விளையாட்டெல்லாம் வைச்சுக் கொள்ளக் கூடாது. உனக்கு அம்மா இல்லை. நீ வயது வந்த பிள்ளை எண்டதை மறந்து நடக்கக் கூடாது. அண்டாஸ்ரான்ட் (மகாலிங்கம் வெளியிலிருந்து)

மகா : (உரத்து) மாலதி.... மாலதி...

மாலதி : டடி, அந்த லூஸ் தான் வருகுது

மகா : மாலதி.... மாலதி.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார் : ஹூ இஸ் தட்? ... நீ உள்ளை போ மாலதி.

(மகாலிங்கம் கையில் ஒரு பையுடன் உள்ளே வருகிறான்)

மார் : ஹூ ஆர் யு?

மகா : ஐ ஆம் மகாலிங்கம். ஹூ ஆர் யு? மாலதியின்ரை முகச் சாயல் இருக்கு. மாலதின்ரை அப்பாவோ?

மார் : நான் ஆராயிருந்தால் உனக்கென்ன?

மகா : ஹி.... வேறை ஆருமெண்டால் எனக்கொண்டுமில்லை. மாலதியின்ரை அப்பாவெண்டால் கொஞ்சம் மரியாதை யாய்க் கதைக்க வேணுமல்லே. அதுசரி மாலதி எங்கை?

மார் : எதுக்கு மாலதியை?

மகா : அதேன் உங்களுக்கு. எங்களுக்குள்ளை எத்தினையோ ரகசியங்கள் இருக்கும். நீங்கள் ஆர் எண்டு சொல்லுங்கோ, சொல்லுறன்.

மார் : நான் தான் மாலதியின்ரை பாதர்.... அதாவது மாலதி யின்ரை தகப்பன்.

மகா : ஹி... நான்தான் முதலிலேயே சொல்லிப் போட்டேனே உங்களின்ரை காபன்கொப்பி மாதிரி இருக்கு மாலதி. இஞ்சாருங்கோ மாலதி எங்கை? அவளுக்கு இந்தப் பனம் பூரான் எண்டால் நல்ல விருப்பம் அதுதான் வெட்டிக்கொண்டு வந்தனான்.

மார் : ஐ சே யு கெட் அவுட். போ வெளியே.

மகா : உப்பிடிச் சொன்னாப்போலை நான் போயிடுவேனே. உங்களுக்கு விஷயம் தெரியாது போலையிருக்கு. ஏன் மாலதி உங்களுக்குச் சொல்ல இல்லையே.

மார் : என்ன விஷயம்?

மகா : ஹி... உங்களுக்கு முன்னாலை சொல்ல எனக்கு வெட்க மாயிருக்கு. எண்டாலும் சொல்லுறன். நான் மாலதியைக் கலியாணம் கட்டப் போறன்எல்லே. என்னைக் கெட் அவுட் எண்டு கலைச்சால் எனக்குப் பின்னாலை உங்கடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகள் மாலதியும் ஓடி வந்திடுவாள். பிறகு என்ன செய்வியள். எல்லாரும் உங்களைப் பகிடி பண்ணு வின மெல்லே.

மார் : என்ரை மகள் உனக்குப் பின்னாலை ஓடி வந்திடுவாள் எண்டு நீ நினைக்கிறியா?

மகா : நீங்கள் சிலவேளை அறைக்குள்ளை போட்டுப் பூட்டி வைப்பியளாக்கும். அப்பிடியெண்டால் அடுத்த நாளைக்கு பேப்பரிலை வரும். பென்சனியர் மார்க்கண்டரின் மகள் நஞ்சருந்தித் தற்கொலை. காதலுக்குக் குறுக்கே தந்தை நின்றதன் எதிரொலி. அதுக்கடுத்தநாள் பேப்பரிலை காதலியின் பிரிவு தாங்காமல் காதலன் மகாலிங்கம் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை. அது உங்களுக்கு விருப்பமே?

மார் : மகாலிங்கம் (தழுதழுத்த குரலில்) டேக் யுவர் சீட்.... இதிலை உட்கார். ஐ பீல் சொறி போர் திஸ் பெலோ.... மாலதி.... மாலதி...

மகா : ஓ... மாலதி இவ்வளவு நேரமும் வீட்டுக்குள்ளேயே இருந்தவ இண்டைக்கு வரட்டும். நான் அவவோடை கதைக்க மாட்டன். (மாலதி வெளியே வருகிறாள்)

மாலதி : என்ன டடி. கூப்பிட்டீங்களா?

மார் : மகாலிங்கத்துக்கு குடிக்க ஏதாவது கொண்டா.

மாலதி : மகான் கோப்பி கொண்டு வரட்டா?

மகா : எனக்கு வேண்டாம்.

மாலதி : ஏன் வேண்டாம்.

மகா : ஐ டோன்ற் ரோக். நான் உன்னோடை கதைக்க மாட்டன்.

மாலதி : ஏன்?

மகா : நான் உன்னோடை கோபம்.

மாலதி : (தனக்குள் நையாண்டிச் சிரிப்புடன்) அடேயப்பா, கலியாணம் கட்ட முந்தியே இப்படிக் கோவிச்சால் பிறகு....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகா : நான் வந்து எவ்வளவு நேரமாக உன்னைக் கூப்பிட்டனான். நீ ஏன் எண்டும் கேக்க இல்லை. உன்ரை டடி என்னைத் தடிஎடுத்துக்கலைக்கிறார். அவர் என்னைக் கெட் அவுட் எண்டு கத்தேயுக்குள்ளை கூட நீ எட்டிப் பார்க்கயில்லைத்தானே.

மாலதி : மன்னிச்சுக் கொள்ளுங்கோ. இப்ப கோப்பி கொண்டு வாறன் குடியுங்கோ.

மகா : முதலிலை, இந்தா நீ கேட்ட பூரான், எடுத்து விழுங்கு. அந்த உன்ரை டடிக்கும் வாய் ஊறுது, அவருக்கும் குடு. (தழுதழுக்க) மாலதி, இனிமேல் என்னைக் கெட் அவுட் எண்டு பேசக்கூடாதெண்டு சொல்லு. (மார்க்கண்டருக்கு கண் கலங்குகிறது)

மார் : ஹவ் ஏ நைஸ் போய் (பெருமூச்சு) பட்...

மகா : மாலதி, ஏன் உன்ரை டடிக்கு கண் கலங்குது.

மாலதி : (சமாளித்து) அது ஒண்டுமில்லை மகான். டடிக்கு இப்பிடித் தான், அதிகமாகக் கதைச்சால் அவருடைய கண் கலங்குகிறது வழக்கம். என்ன டடி..... (உள்ளே ஓடுகிறாள்).

மார் : யேஸ்... யேஸ்..

மகா : இஞ்சாருங்கோ, என்னை இனிமேல் கெட் அவுட் எண்டு சொல்ல மாட்டீங்கள் தானே.

மார் : சொல்ல மாட்டன் (மாலதி கோப்பியுடன் வருகிறாள்)

மகா : அப்ப நான் போயிட்டு வாறன்.

மார் : கோப்பியை வாங்கிக் குடிச்சிட்டுப் போதம்பி:

மகா : (கோப்பியை வாங்கியபடி) நான் மாலதிக்குப் பூரான் குடுக்கத்தான் வந்தனான். இனி அடிக்கடி வருவன். இண்டைக்கு பண்டிதர் பாடம் சொல்லித்தர வரச் சொன்னவர். மார்க்கண்டர் எழுந்து கொண்டே)

மார் : ஏன் அவசரப்படுகிறீர் ஆறுதலாய் இருந்து கதையும் வாறன் (உள்ளே போகிறார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகா : மாலதி உன்ரை டடி நல்ல மனுசன் என்ன? என்ரை வருங்கால மாமனார் எல்லே. அப்பிடித்தான் இருக்க வேணும்.

மாலதி : (சிரிக்கிறாள்)

மகா : ஏன் சிரிக்கிறாய் மாலதி?

மாலதி : இப்பவே மாமாமுறை கொண்டாடிறதைப் பார்த்துச் சிரிக்கிறன்.

மகா : எப்பிடியோ மாமாவாகப் போறவர்தானே. மாலதி இப்பவே சொல்லிப் போட்டன். நாங்கள் கலியாணம் முடிச்ச பிறகு சும்மா டசின் கணக்கிலை பிள்ளைகளைப் பெத்துத் தள்ளிக்கொண்டு இருக்கப்படாது.இரண்டே இரண்டு பிள்ளைக்கு மேலை பெறக்கூடாது. அது ஆம்பிளை எண்டால் என்ன பெம்பிளை எண்டால் என்ன?

மாலதி : கடவுள் தாறதை என்ன செய்யிறது.

மகா : எனக்கு இதுக்குத்தான் கோபம் வாறது. கடவுளே பிள்ளை தாறது. நீ படிச்சனியெல்லே. சரி... சரி.. அதெல்லாம் அந்த நேரம் நான் பார்த்துக் கொள்ளுவன். பண்டிதர் காவல் இருக்கப் போறார். நான் போட்டு வரட்டே. உன்னை விட்டிட்டுப் போகவும் மனமில்லாமல் கிடக்கு. கலியாணம் முடிச்சாப் பிறகு என்னோடை தானே இருப்பாய்?

மாலதி : பின்னை வேறை ஆரோடை இருக்கிறது?

மகா : இஞ்சார் மாலதி, கலியாணம் முடிச்ச பிறகும் என்னை மகான் எண்டு கூப்பிடக் கூடாது.

மாலதி : பின்னை என்னண்டு கூப்பிடுகிறது?

மகா : அத்தானெண்டு கூப்பிடவேணும்.

மாலதி : என்னை எப்பிடிக் கூப்பிடுவீங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகா : மாலு எண்டு. அது தான்இப்ப பாஷன். அப்ப வாறன். (மகாலிங்கம் போக மார்க்கண்டார் வெளியே வருகிறார்)

மாலதி : போயிட்டு வாங்கோ.....

மார் : என்ன மாலதி மகாலிங்கம் போயிட்டாரா?

மாலதி : ஓம் டடி, பாத்தீங்கள் தானே. இந்த விசரைப் போய் நான் கலியாணம் கட்டப் போறன் எண்டு சொல்லுவனே.

மார் : (கோபத்துடன்) மாலதி... அவனுக்கு விசர் இல்லை மகளே.... ஹி இஸ் நொட் மாட். அவனை புரிஞ்சு கொள்ள உங்களாலை முடியவில்லை. தற்ஸ் ஓல்.

(திரை)

## காட்சி 3

(சிவப்பிரகாசத்தாரின் வீடு)

சிவ : செல்லம்.... செல்லம்....

செல் : என்ன

சிவ : இப்ப எங்கடை மகாலிங்கம் மாலதியைப் பற்றி ஒண்டும் பேசக் காணயில்லை. என்ன சங்கதி?

செல் : அப்ப அவன் எந்த நேரமும் மாலதியைப் பற்றிப் பேசவேணுமெண்டு உங்களுக்கு விருப்பமே.

சிவ : நீ மாலதியைப் பற்றி லேசாக நினைக்காதை. பெரிய இடம். பெட்டையும் நல்ல வடிவு.

செல் : அப்ப நீங்களே கட்டி வைப்பீங்கள் போலையிருக்கு.

சிவ : அதிலை என்னப்பா பிழை. மனங்கொண்டது மாளிகை. இவனும் சோதனை பாஸ்பண்ணிப் போட்டான். மாலதி யின்ரை தகப்பன் மார்கண்டரும் நல்ல செல்வாக்குள்ள மனிசன். நினைச்சாரெண்டால் மகானை ஒரு இடத்திலை கொழுவிப் போடுவார்.

செல் : கதைக்கிறதுக்கு வேறை கதை இல்லையே. உங்களுக்கு எங்கடை மகனுக்குக் கட்டி வைக்கிறதுக்கு மார்க்கண்டர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓமெண்டு சொல்லப் போறாரே. இல்ல மாலதி தான் சம்மதிக்கப் போறாளோ?

சிவ : செல்லம்மா, நீ சும்மா விழல் கதை கதைக்காதை: மகாலிங்கத்தை தன்னுடைய மருமகனாக்கிறதுக்கு மார்க்கண்டருக்கு நல்ல விருப்பம்.

செல் : நீங்கள் என்ன பகிடி விடுறியளே.

சிவ : நான் ஏன் பகிடி விடுறன். மார்க்கண்டர்தான் கேட்டார். நான் மகானுக்கு ஒரு வேலை கிடைக்கட்டும் பிறகு பாப்பம் எண்டு சொன்னன்.

செல் : (ஆர்வமாக) அதுக்கு அவர் என்ன சொன்னவர்?

சிவ : தான் எப்பிடியும் அவனுக்கு ஒரு நல்ல வேலை தேடிக் குடுப்பன் எண்ணுறார்.

செல் : எதுக்கும் மாலதி சம்மதிக்க வேணுமே.

சிவ : அவள்தான் மகானைக் கலியாணம் கட்டுறனெண்டு சொல்லிப் போட்டாளாமே.

செல் : எண்டு மகான்தானே எங்களுக்குச் சொன்னவன். உங்களுக்கும் என்ன விசரே. அவள் சும்மா இவனுக்குப் பகிடி பண்ணச் சொன்னவளாம். உங்களுக்கு ஒண்டுமே தெரியாதப்பா. ராமலிங்கம் அண்ணையின்ரை மகன் கணேசன் அவளைச் சுத்திக் கொண்டு திரியிறானாம்.

சிவ : ஆர் அந்தத் தறுதலையோ, முழிவியளத்துக்கே கூடாத மூதேவி. தவறணை தவறணையாகக் குடிச்சுப் போட்டு பெட்டையளுக்குப் பின்னாலை திரியுது.

செல் : எங்களின்ரை ஆக்களைத் திட்டாவிட்டால் உங்களுக்குத் திண்டது செமிக்காதே. இந்த நாளையில் பெடியங்கள் ஆர் குடிக்காமல் இருக்கிறாங்கள். ஆர் பெட்டையளுக்குப் பின்னாலை திரியாமல் இருக்கிறாங்கள்.

சிவ : அப்ப அதெல்லாம் சரியெண்டதோ உன்ரை விளக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல் : சரி பிழை சொல்ல நான் வர இல்லை இது உலக வழங்கம். அந்த நேரம் நீங்கள் எனக்குப் பின்னாலை திரிய இல்லையே.

சிவ : ஆர் நானோ?

செல் : வேறை ஆர் நானே.

சிவ : சரி சரி, பழைய கதைகள் எல்லாம் இப்ப என்னத்துக்கு (சோமு உள்ளே வருகிறான்).

சோமு : ஐயா .... ஐயா.....

செல் : உதாரப்பா புதுப்பெடியன் ஒண்டு வருகுது.

சிவ : சோமு, என்னடா, இவனைத் தெரியாதே. பென்சனியர் வீட்டு வேலைக்காறப் பெடியன்.

சோமு : மகாலிங்கம் தம்பி எங்கை ஐயா.

சிவ : அவன் வீட்டிலை இருக்கிறவனே. ஊர் உலாத்தப் போயிருப்பான். ஏன் சோமு.

சோமு : மார்க்கண்டு ஐயா, கையோடை கூட்டி வரச் சொன்னார்.

சிவ : ஏன் வரச் சொன்னவர்.

சோமு : எனக்கெப்படித் தெரியும்?

செல் : மெய்யே சோமு, எப்பிடி மார்க்கண்டர் ஐயா, நல்ல மனுசனே. சம்பளம் சாப்பாடு எல்லாம் ஒழுங்காய் தாறாரே.

சோமு : சம்பளமே தாறதில்லை அம்மா.

செல் : அடப்பாவம், சாப்பாடாவது நேரத்துக்குக் கிடைக்குதே.

சோமு : சாப்பாட்டுக்கு நேரம் காலம் கிடைக்காது.

செல் : பெரிய இடங்களிலையெல்லாம் இப்பிடித்தான் சும்மா வெளிப்பகட்டுத்தான். உள்ளே போனால் தான் தெரியும். மார்க்கண்டர் ஆள் ஒரு குடிகாரனாம். ஆள் ஒரு கச வாராமாம். ஐஞ்சு சதம் எண்டாலும் கணக்குப் பாக்குமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோமு : அம்மா தயவுசெய்து மார்க்கண்டு ஐயாவை எனக்கு முன்னாலை குறைவாகப் பேசாதையுங்கோ. அவர் ஒரு தங்கப்பவுணான மனுசன்.

செல் : இப்ப நீ தானேயடா மோனை சொன்னாய். சம்பளமே தாறதில்லை. சாப்பாட்டுக்கு நேரகாலம் கிடையாது எண்டு.

சோமு : அம்மா எனக்கு எதுக்குச் செலவுக்குப் பணம். சகல செலவும் ஐயா பாக்கிறார். அதுக்காக சம்பளம் தராமல் விட இல்லை. எனக்கெண்டு ஒரு வங்கிப் பாஸ் புத்தகம் வாங்கித் தந்து மாதம் மாதம் நூறு ரூபா ஒழுங்காக போட்டு விடுகிறார். சாப்பாட்டுக்கு நேரம் காலம் கிடையா தெண்டு சொன்னனே. நீங்கள் அதை வித்தியாசமாக நினைச்சிட்டியள். இந்த நேரம் தான் சாப்பாடு எண்டு இல்லை. நான் நினைச்ச நேரம் நினைச்ச சாப்பாடடை சாப்பிடலாம். ஐயாவை குடிகாறன் எண்டு சொன்னியளே. இப்ப அவர் சாராயத்தை கையாலை தொடுறதில்லை.

சிவ : அப்ப என்ன வேறை ஏதாவது குடிவகை பாவிக்கிறாரே?

சோமு : இல்லை. இப்ப அவர் குடிக்கிறதையே விட்டிட்டார். என்னைக் கூட ஒரு வேலைக்காரன் மாதிரி அவர் நடத் திறதில்லை. சொந்தப்பிள்ளை மாதிரித்தான்.

செல் : அது உன்னைப் பாக்கவே தெரியுது. எண்டாலும் வேலைக் காறங்களுக்கு இவ்வளவு இடம்குடுக்கக்கூடாது. அவங்கள் அவங்களை அந்த அந்த இடத்திலை வைக்க வேணும்.

சிவ : செல்லம்மா விழுந்த பாட்டுக்கு குறிசுடாதை. உன்ரை கதையை நிப்பாட்டு. தம்பி சோமு, மகாலிங்கம் வந்த உடனை வரச் சொல்லுறன். நீ போட்டு வா.

சோமு : சரி ஐயா நான் வாறன். அம்மா வாறன்.
(சோமு போகிறான்)

சிவ : செல்வம்..... இப்ப மார்க்கண்டரைப் பற்றி அறிஞ்சு கொண்டாய் தானே. பெரியவன் எண்டைக்கும் பெரியவன் தான் அப்பா.
(மகாலிங்கம் உள்ளே வருகிறான்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ : மகான் எங்கை போட்டு வாறாய்.

மகா : ஹி......... உலாத்திப் போட்டு வாறன்.

சிவ : உன்னைப் பென்சனியர் மார்க்கண்டர் வரச்சொன்ன வராம். போய் என்ன விஷயம் எண்டு கேட்டுக்கொண்டு வா.

மகா : நான் மாட்டன்.

சிவ : ஏன் மாட்டாய்?

மகா : அங்கை போனால் மாலதியைச் சந்திக்க வேண்டி வரு மெல்லே.

சிவ : அப்ப இப்ப மாலதியைச் சந்திக்கிறதில்லையோ.

மகா : இல்லை

சிவ : ஏன் பாருங்கோ.

மகா : வாக்குக் குடுத்திருக்கிறன்.

சிவ : ஆருக்கு

மகா : பண்டிதர் ஐயாவுக்கு

சிவ : என்னெண்டு

மகா : பண்டிதர் ஐயா சொல்லுமட்டும் மாலதியைப் பார்க்கிற தில்லையெண்டு.

சிவ : இண்டைக்கு திருக்குறள் வகுப்புக்குப் போக இல்லையே.

மகா : அங்கைதான் போகப் போறன். (மகாலிங்கம் போகிறான்)

சிவ : செல்லம், இவன் மகானிலை ஒரு நல்ல குணம் இருக்கு அவதானிச்சியோ?

செல் : என்ன குணம்?

சிவ : பெரிய மனுசருக்கு மரியாதை குடுக்கிறான். அவை சொல்லுறதைக் கேட்டு நடக்கிறான்.

செல் : அதே நேரத்திலை ஆர் என்ன சொன்னாலும் அதை அப்பிடியே நம்பி விடுகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ : மெய்யே செல்லம், உங்கடை பரம்பரையிலை இப்பிடி ஆருக்கும் வருத்தம் இருந்ததோ?

செல் : ஆக எங்கடை பரம்பரையை இழுக்காவிட்டால் உங்களுக்கு பொச்சம் அடங்காது. ஏன் என்ரை பிள்ளைக்கு என்ன விசரே? உங்கடை குணம் உங்கடை பிள்ளைக்கும் இருக்கும் தானே.

சிவ : அப்ப எனக்கும் விசர் எண்டு சொல்லாமல் சொல்லுறாய் என்ன. தெரியுமே என்ரை விசர்க் குணத்தைக் காட்டி விட்டிடுவேன்.

செல் : வேண்டாம்..... வேண்டாம்... எனக்குத் தெரியாத குணமே? அங்கை மாடுகள் தண்ணி விடாயிலையாக்கும் கத்துதுகள். கொஞ்சம் தண்ணியும் வைச்சு, வைக்கலும் போட்டிட்டு வாருங்கோ?

சிவ : நீங்கள் என்ன செய்யப் போறியள்?

செல் : சமைக்கப் போறன்.

(திரை)

## காட்சி - 4

(தெருவோரம் மகானும் மாலதியும் சந்திக்கின்றனர்)

மாலதி : என்ன மகான், என்னைக் கண்டிட்டும் காணாத மாதிரிப் போறீங்கள்.

மாக : நான் உன்னைப் பார்க்கமாட்டன் மாலதி.

மாலதி : ஏன் என்னோடை கோபமே?

மகா : இல்லை நான் விரதம்.

மாலதி : விரதமெண்டால் என்னைப் பார்க்கக்கூடாதே.

மகா : உன்னைப் பார்க்கக் கூடாதெண்டதுதானே விரதம்.

மாலதி : இங்கை திரும்பி என்னை ஒருக்கால் பாருங்கோ.

மகா : ஏய் மாலதி, நான் வாக்குத் தவறமாட்டன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலதி : அரிச்சந்திரன் பரம்பரை. நீங்கள் ஏன் இப்ப எங்கடை வீட்டுக்கும் வாறதில்லை?

மகா : நான் வரமாட்டன்.

மாலதி : ஏன் வரமாட்டீங்கள்?

மகா : நான் உன்னைக் கலியாணம் முடிக்குமட்டும் உங்கடை வீட்டுக்கு வரமாட்டன்.

மாலதி : (சிரிக்கிறாள்)

மகா : ஏன் சிரிக்கிறாய் மாலதி

மாலதி : திரும்பிப் பாருங்கோ என்னை, ஏன் எண்டு சொல்லுறன்.

மகா : அதுதான் நடக்காது. நான் பண்டிதர் ஐயாவுக்குச் சத்தியம் பண்ணிக் குடுத்திருக்கிறன். கலியாணம் முடிக்கு மட்டும் உன்னைப் பார்க்க மாட்டன்: பார்த்துப் பேசமாட்டன் எண்டு.

மாலதி : இப்ப என்னோடை பேசிப்போட்டீங்கள் தானே.

மகா : அது மாலதி வந்து பேசக்கூடாதெண்டுதான் நினைச்ச னான். பிறகு நீ கோவிப்பாய் எண்டுதான் கதைச்சனான். இனி கதைக்காதை நான் போறன்.

மாலதி : நீங்கள் என்னைப் பார்த்துப் பேசாட்டால் நான் உங்க ளோடை கோவம்.

மகா : ஐயோ, நான் இப்ப என்ன செய்யிறது மாலதி, நீ என்னோடை கோவிச்சால் நான் செத்துப்போவன். நான் உயிரோடை இருக்கமாட்டன். உன்னைப் பார்த்தால் என்ரை வாக்குத் தவறிப்போகும். நான் என்ன செய்ய?

மாலதி : மகான், உண்மையிலை என்னிலை உங்களுக்கு அவ்வளவு ஆசையிருக்கா.

மகா : ஆசையா, மாலதி இந்தா இந்த லேஞ்சியைப் பிடி. (திரும்பிப் பார்க்காமல் பின்பக்கத்தால் லேஞ்சியைக் குடுக்கிறான்) நான் திரும்பிப் பார்க்க மாட்டன. என்ரை இரண்டு கண்ணையும் இந்த லேஞ்சியாலை கட்டிவிடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலதி : ஏன் மகான் கண்களைக் கட்டச் சொல்லுறியள்?

மகா : காரணம் இருக்கு. நான் உன்னைப் பாத்துப் பேசமாட்டன. பண்தடிருக்கு வாக்குக் குடுத்திட்டன. இப்ப உன்னோடை கொஞ்சம் பேசாமலும் போக முடியவில்லை. அதினாலை கண்ணைக் கட்டிக் கொண்டு உன்னைப் பார்க்காமல் பேசப் போறன். கண்ணைக் கட்டு மாலதி....

(மாலதி கண்ணைக் கட்டுகிறாள்)

மெல்ல.......மெல்ல..... இறுக்கிக் கட்டாதை. கட்டியாச்சே?

மாதி : ஓ.... ஓ... கட்டியாச்சு.

மகா : உன்ரை கை என்ரை முகத்திலை பட பூவாலை ஒத்தி எடுக்கிற மாதிரி இருந்திது.

மாலதி : (சிரிக்கிறாள்)

மகா : ஏன் சிரிக்கிறாய் மாலதி?

மகா : நீங்கள் கண்ணைக் கட்டிக் கொண்டு என்னோடை கதைக்கிறதைப் பாக்க எனக்குச் சிரிப்பாய் இருக்கு.

மகா : (அழுகிறான்)

மாலதி : மகான் ஏன் அழுகிறீங்கள்?

மகா : நீ சிரிக்கிற நேரம் உன்ரை கன்னம் இரண்டிலும் குழி விழுமெல்லே. அதைப் பார்க்க எவ்வளவு வடிவாக இருக்கும். அதைப் பார்க்க முடிய இல்லையே.

மாலதி : அப்ப கண்ணை அவிட்டு விடட்டே?

மகா : ஐயோ வேண்டாம். என்ரை வாக்குத் தவறிப் போயிடும். நான் உன்னைக் கலியாணம் முடிச்ச பிறகு ஆசை தீரப் பாக்கலாம் தானே. மாலதி நீ இப்ப எங்கை போறாய்.

மாலதி : நான் உங்களைத் தேடிக் கொண்டுதான் வந்தனான். கனநாளாய் எங்கடை வீட்டுப் பக்கமே நீங்கள் வரஇல்லை தானே. நீங்கள் எங்கை போறீங்கள் மகான்?

மகா : நான் பண்டிதர் வீட்டுக்குத் திருக்குறள் வகுப்புக்குப் போறன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலதி : மகான், உங்களுக்கு பிடிச்ச திருக்குறள் ஒண்டு சொல் லுங்கோ பாப்பம்.

மகா : எனக்குப் பிடிக்காத திருக்குறள் ஒண்டுமே இல்லை. நீ கேட்ட உடனை எனக்கு நேற்றுப் படிச்ச ஒரு திருக்குறள் தான் ஞாபகத்துக்கு வருகுது.

மாலதி : சொல்லுங்கோ மகான்.

மகா : பாலொடு தேன் கலந்தற்றே பனிமொழி வாலெயிறு ஊறிய நீர். அஃ்தாகப்பட்டது. மென்மையான மொழி களைப் பேசுகின்ற உன்னுடைய தூய பற்களில் ஊறிய நீர் பாலுடன் தேன் கலந்தது போன்றதாகும். இதை நான் சொல்ல இல்லை. வள்ளுவர்தான் சொல்லியிருக்கிறார். ஆனால் அது உண்மைதான் எண்டதை இப்ப நான் உணருறன். என்ன மாலதி பேசாமல் இருக்கிறாய்.

மாலதி : (தனக்குள்) இவருக்கு விசர் நல்லாய் முத்தித்தான் போச்சு.

மகா : பாத்தியே, நீயே ஒண்டும் பேசாமல் யோசிக்கிறாய். வள்ளுவர் குறைந்த ஆளில்லை. (ஒலிப்பதிவுக் கருவி மூலம் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்க வேண்டும்) என்ன மாலதி கார் ஒண்டு வந்து நிற்கிறது.

மாலதி : அது வந்து மகான் நீங்கள் இதிலை நிக்காதையுங்கோ ஓடுங்கோ... ஓடுங்கோ... (கணேசன் வந்து மகாலிங்கத் துக்கு அடிக்கிறான்)

மகா : ஆ.... ஐயோ....... ஐயோ......... இந்தக் கண்ணை அவிட்டு விடு மாலதி.......

மாலதி : கணேஷ் அவரை அடியாதை

கணே : நீ மூச்சுக் காட்டாமல் இரடி, தெரு வழிய நிண்டு கண்ணா மூச்சி விளையாடுறியளோ. டேய் இண்டைக்கு உன்னை என்ன செய்யிறன் எண்டு பார்.

மகா : டேய் கண்கட்டை அவிட்டு விட்டுப் போட்டு அடியடா பாப்பம். ஐயோ மாலதி..... மாலதி... நீ இதிலை நிக்காதை ஓடு மாலதி...... நான் கண்கட்டை அவிழ்க்கப் போறன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கணேசன் மகானைத் தள்ளி விழுத்திப் போட்டு ஓடுகிறான். மீண்டு கார் போகும் சத்தம் ஒலிக்கிறது)

மாலதி : ஐயோ மகான், அந்தப் பாவி கணேசன் உங்களை இப்பிடி அடிச்சுப் போட்டானே.

மகா : நீ போக இல்லையே மாலதி, கண்கட்டை அவிழ்க்கப் போறன், நீ என்ரை கண்ணிலை படாமல் போ.

மாலதி : மகான், பிடிவாம் பிடிக்க வேண்டாம். நான் உங்களை வீட்டிலை கூட்டிக்கொண்டு போய் விடுறன் வாருங்கோ.

மகா : வேண்டாம் மாலதி நான் போவன்.

(திரை)

## காட்சி 5

(சிவப்பிரகாசத்தார் வீடு. கணேஷ் சீட்டி அடித்த வண்ணம் வருகிறான்)

செல் : டேய் கணேஷ், ஏன்ரா தம்பி இப்பிடி தலைதெறிக்க நடக்கிறாய்.

கணே : மாமி, தலை நிமித்தித்தான் நடக்கிறன். ஏன் இப்ப என்ன நடந்திட்டுது?

செல் : என்ன நடந்திட்டுதோ, ஏன்ரா என்ரை பிள்ளைக்கு அடிச் சனி, ஒண்டுமே அறியாத பாவி அது.

கணே : அப்பிடிக் கேளுங்கோ மாமி. அது நியாயம். நான் மாலதி யைக் கலியாணம் முடிக்கப்போறன் எண்ட விஷயம் இந்த ஊர் முழுக்கத் தெரியும். அப்பிடி இருக்க உங்கடை மகன் மகாலிங்கத்துக்கு மாலதியோடை என்ன கதை. கேக்கிறதுக்கு மறுமொழி சொல்லுங்கோ.

செல் : எடெ தம்பி அவனைப்பற்றித்தான் ஊர் முழுக்கத் தெரியுமே. ஒரு அசடனடா. அப்பாவி.

கணே : அப்பாவி, ஓ பபா..... வாய்க்குள்ள விரலை வைச்சால் கடிக்கத் தெரியாது. அவள் மாலதியைக் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணை கட்டுவிச்சுப் போட்டு, றோட்டிலை கண்ணாமூச்சி விளையாட்டு விளையாடுறான். அவனே அசடன். கள்ள றாஸ்கல். எல்லாம் வெறும் நடிப்பு. அடிச்சுப்போட்டு விட்டிருக்கப்படாது. கொண்டிருக்க வேணும். நான் விட்டது பிழைதான்.

செல் : ஏலுமோடா. டேய், என்ன செய்யுறது ஒண்டுக்கை ஒண்டு எண்டு பாத்துப் போட்டுப் பேசாமல் இருக்குகிறன். இல்லாட்டால் உன்னை இப்ப பொலிசிலை பிடிச்சுக் குடுத்து நாரி முறிப்பிச்சு இருப்பம்.

கணே : மாமி ஏலுமெண்டால் அதை ஒருக்கால் செய்து பாருங் கோவன்.

செல் : டேய் டேய் துள்ளாதை. உங்கடை உறவு இண்டையோடை முடிஞ்சுது. நீ எப்ப என்ரை பிள்ளைக்குக் கை நீட்டி அடிச்சியோ. அந்த நேரத்திலையிருந்து உங்கடை உறவு முடிஞ்சுது.

கணே : உங்கடை உறவைப்பற்றி எனக்கு அக்கறை இல்லை. ஏன் நீங்களே எங்கடை வீட்டுக்கு அரிசி அனுப்புறியள். எண்டாலும் உங்கடை மகனை இனியெண்டாலும் கொஞ்சம் அடக்கமாக இருக்கச் சொல்லுங்கோ. மாலதியின்ரை விஷயத்திலை இனியும் அவன் குறுக்கை வந்தால் உயிரோடை விடமாட்டன்.

செல் : டேய் கணேசா, வீணாகக் கனவு காணாதை. இந்தச் சென் மத்திலை மாலதிக்கும் உனக்கும் கலியாணம் நடக்காது.

கணே : ஓகோ, சவால் விடுறீங்களாக்கும். எப்பிடியாவது உங்கடை அசட்டுப் பிள்ளையை மாலதிக்கு மாப்பிள்ளையாக்கி பென்சனியர் மார்க்கண்டற்றை சொத்து முழுவதையும் தட்டிக்கொள்ளப் பாக்கிறயள். அது நடக்காது மாமி.

செல் : மடையா, கலியாணங்கள் சொர்க்கத்திலை நிச்சயிக்கப் படுறதடா. நானோ நீயோ நினைச்சுத் தீர்மானம் பண்ண முடியாது. ஆனால் ஒண்டு சொல்லுறன். நான் அந்த மாலதியை என்ரை மருமகளாக்க வேணுமெண்டு எப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவுமே நினைச்சது கிடையாது. நானும் ஒரு பெண்தானடா. மாலதியின்ரை வாழ்க்கையை நான் ஒரு நாளும் பாழாக விடமாட்டன்.

கணே : அப்பிடிச் சொல்லுங்கோ மாமி. அது தான் முறை.

செல் : என்ரை மகன் மகாலிங்கத்துக்கு மாலதியைக் கட்டி வைக்க நான் ஒருநாளும் சம்மதிக்க மாட்டன்.

கணே : குடுங்கோ கையை, நீங்கள் பெண் தெய்வம். அந்த அச ட்டுக்குக் கலியாணம் வேற தேவையே.

செல் : அவனைவிட மோசமான உனக்கு மாலதியைக் கட்டி வைக்கவும் நான் விடப்போறதில்லை.

கணே : மாமி

செல் : ஓமடா.

கணே : இந்தக் கதையை விட்டுத்தள்ளுங்கோ மாமி. நான் நினைச் சால் இண்டைக்கே மாலதியைக் கலியாணம் கட்ட முடியும்.

செல் : கூடப்பிறந்த அண்ணன்ரை மகனெண்டு பார்க்கிறன். இல்லாட்டால் இதுவரையிலை உனக்குச் செய்ய வேண்டிய மரியாதையைச் செய்திருப்பன்.

கணே : சும்மா வெருட்டாதையுங்கோ மாமி. நீங்கள் என்ரை மாமி எண்டபடியால் தான் இவ்வளவு நேரமும் பொறுமை யாக இருக்கிறன். இல்லாட்டால்.......

செல் : என்னடா செய்திருப்பாய். காவாலி நாய் போடா வெளியிலை, இந்த வாசல் படியை நீ மீதிக்கக் கூடாது.

கணே : மாமி நீங்கள் வா எண்டாலும் நான் இந்த வீட்டுக்கு வரப்போறதில்லை.

செல் : வரவேண்டாம் போய்த்துலை. (ராமலிங்கம் வந்துகொண்டு)

ராம : ஆரையடி செல்லம் போய்த்துலை எண்டு திட்டுகிறாய்.

செல் : வேறு ஆரை, உன்ரை ஆசை மகனைத்தான்.

ராம : உனக்கு அவ்வளவு துணிவு இருக்கேயடி. இல்லை இப்ப அவன் என்ன பிழை செய்து போட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல் : என்ரை பிள்ளைக்குத் கைநீட்டி அடிச்சுப் போட்டான்.

ராம : அதிலை என்ன பிழை. அடிக்கத்தானே வேணும். பிழை கண்ட இடத்திலை திருத்தத்தானே வேணும்.

செல் : பெத்த தாய் தகப்பன் நாங்கள் இருக்கிறம். பிழை சரி பார்க்க, அப்பிடி அவன் என்ன பிழை செய்து போட்டான்?

ராம : எடி எடி செல்லம், நீயும் நானும் ஒரு உடலுக்காலை வந்த பிள்ளைகள் தான்ரி. உன்ரை குணம் எனக்கு நல்ல வடிவாகத் தெரியும். படிக்கிற பிள்ளைகளுக்கு என்னடி காதலும் கூதலும். அதுகும் வெக்கம் ரோசம் இல்லாமல் நடுரோட்டிலை நிண்டுகொண்டு மாலதியோட கண் பொத்தி விளையாடுறானாம். உன்ரை மகன். இதைப் பாத்திட்டுப் பொறுக்க முடியாமல், காரிலை வந்த என்ரை மகன், இரண்டு தட்டுத் தட்டிப் போட்டான். அது பிழையேடி?

செல் : ஆகா, மகா யோக்கியன் உன்ரை பிள்ளை. ஒரு தவறணை யும் விடாமல் மூக்குமுட்டக் குடிச்சுப் போட்டு, ஊரிலை யுள்ள வம்பையெல்லாம் விலைக்கு வாங்கிக் கொண்டு, தறிதலையாகத் திரியிற உன்ரை பிள்ளையை ஆர் திருத் திறதெண்டு கேக்கிறன். சும்மா பேய்க் கதை கதைக்காமல் போ அண்ணை.

கணே : மாமி, கதைக்கிறதை அளவோடை கதையுங்கோ.

செல் : இல்லாட்டால் தலையைச் சீவிப்போடுவீர் என்ன?

ராம : எடியே செல்லம், உனக்கு அவ்வளவுக்கு வாய் நீளுது என்ன. எனக்குத் தெரியுமடி. உன்ரை வாய்க் கொழுப்பை அடக்கத்தானே கடவுள் உனக்கொரு அசட்டு மகனைத் தந்திருக்கிறார்.

செல் : அண்ணை, காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு. அவன் அசடெண்டால் எங்களோடை இருக்கட்டும். நீ உன்ரை அலுவலைப்பார். என்ரை பிள்ளைக்கு என்ன குறை எண்டு கேக்கிறன். அவனுக்கிருக்கிற மூளை உன்ரை மோன் கணேசனுக்கு இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராம : பொத்தடி வாய்.
(மகாலிங்கம் வருகிறான்)

மகா : என்னம்மா, அண்ணனும் தங்கையும் வலு அன்பாகக் கதைக்கிறீங்கள். ஓ..... மச்சான் கணேசுவும் நிக்கிறயே.

செல் : டேய் மகான், இவனோடை நீ இனிமேல் கதைக்கப்படாது.

மகா : ஹி ஏன் அண்டைக்கு எனக்கு மச்சான் அடிச்சுப் போட்டனெண்டோ. அம்மா வள்ளுவர் நெறியிலை வையகம் வாழவேணும் இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல் எண்டு வள்ளுவர் சொல்லியிருக்கிறார். இவன் அடிச்சது எனக்கெப்பவோ மாறிப் போச்சு. ஆனால் இவன்ரை மனச்சாட்சி அதுக்காக அழுது கொண்டே இருக்கும். டேய் மச்சான் கணேஷ் எனக்குக் கோவம் இல்லையடா. வா, தேத்தண்ணி குடிப்பம். சீனி இல்லை பனங்கட்டியோடைதான் குடிக்கவேணும். (கணேசனின் கையைப் பிடித்திழுக்கிறான்)

கணே : விடடா கையை, றாஸ்கல். ரோசமில்லாத கழுதை

மகா : ஏன் மச்சான் போபப்படுகிறாய். மாலதி எப்பிடியும் உன்னைக் கட்டமாட்டாள்.

கணே : ஓ, நீ ஒரு மன்மதக் குஞ்சு. உன்னைத்தான் கட்டப் போறாள். என்ன. உனக்கு மாலதியல்ல ஒரு பெம்பிளையும் கிடைக்கமாட்டாள்.

மகா : அப்பிடி எல்லாப் பெட்டையளும் உன்னட்டை வந்து சொன்னவளவையே?

கணே : போய்க் கண்ணாடியிலை உன்ரை மூஞ்சையைப் பார்.

மகா : ஏன் மச்சான் நான் வடிவில்லையே?

கணே : (கேலியாக) ஆர் சொன்னது. நீ மன்மதன். உன்ரை பேச்சைக் கேட்டாலே பெட்டையள் எல்லாம் சொக்கிப் போயிடுவாளவை.

மகா : ஆ (சந்தோஷமாக) உண்மையே மச்சான். அதுதான் மாலதி எனக்காக உயிரை விடுகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல் : மகான் இந்தக் காவாலியோடை உனக்கென்னடா பேச்சு.

கணே : மாமி பிறகும் சொல்லுறன் அளவோடை கதையுங்கோ.

செல் : போடா.... போடா.....

மகா : என்ன பிறகும் சண்டைபிடிக்கப் போறீங்கள் போலையிருக்கு. மச்சான் கணேஷ். மாலதியைத் தவிர நான் வேறை ஆரையும் கட்டமாட்டன். நீ பயப்பிடாதை கண்ட கண்ட பெட்டையளோடை உன்னைப் போல ஊர் சுத்தமாட்டன்.

கணே : கண்டனியேடா நான் பெட்டையளோடை ஊர் சுத்தினதை.

மகா : நான் மட்டுமில்லை. மாலதிகூடச் சொன்னவள். உன்னைக் கண்டாலே தனக்கு அருவருப்பாக இருக்காம் நீ பக்கத்திலை வந்தாலே ஒரே சாராய மணமடிக்குதாம்.

கணே : அப்பிடிச் சொன்னவளே மாலதி?

மகா : பின்னை என்ன நான் சொல்லுறனே. அவள் எனக்கு ஒண்டையும் ஒழிக்கமாட்டாள். மச்சான் வள்ளுவரே சொல்லுறார் உண்ணற்க கள்ளை உணில் உண்க சான்றோரால் எண்ணப்பட வேண்டாதார் எண்டு. அஃதாகப்பட்டது சான்றோரால் மதிக்கப்பட வேண்டாம் எண்டு நினைச்சால் நல்லாய் குடிமச்சான். எல்லாராலையும் மதிக்கப்பட வேணுமெண்டால் குடிக்கிறதை விட்டிடு. நீயும் நல்ல பிள்ளையாயிருந்தால் மாலதி இல்லையெண்டாலும் ஆராவது ஒரு நல்ல பெண் உன்னையும் விரும்புவாள்.

கணே : மகான் உன்ரை புத்திமதி எனக்குத் தேவையில்லை. எனக்கு மாலதி கிடைக்க இல்லை எண்டால் என்ன நடக்குமெண்டு எல்லாரும் இருந்து பாருங்கோ. மரியாதையாய் உனக்குச் சொல்லுறன் இண்டையிலிருந்து நீ மாலதியை மறந்திடு.

மகா : நான் மறந்திடுவன். ஆனால் மாலதி பிறகு தன்ரை உயிரையே மறந்து விடுவாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணே : பெட்டையள் எல்லாரும் அப்பிடித்தான்ரா சொல்லுறது வழக்கம். நீங்கள் இல்லாவிட்டால் உயிரை விட்டிடுவன் அப்பிடி இப்பிடி எண்டு. எனக்கு எத்தினை பெட்டையள் காதல் கடிதங்கள் எழுதியிருக்கினம். பொழுது போகாட்டால் தாறன் வாசிச்சுப்பார். அவ்வளவு பேரையும் நான் கலியாணம் கட்டப்போறேனே?

ராம : செல்வம், எடி தங்கைச்சி. நீயும் நானும் இங்கை மரக் கட்டையள் மாதிரி நிக்கிறம், எங்கடை பிள்ளையள் எங்களுக்கு முன்னாலை கதைக்கிற கதை காதிலை விழுகுதே. காலம் மாறிப்போச்சடி.

செல் : நீ இப்ப சமாளிக்காதை அண்ணை. இந்த வீட்டுக்கு உன்ரை மகன் இனிமேல் வரப்படாது.

ராம : என்ரை மகன் வரக்கூடாத இடத்துக்கு நான் என்னைத் துக்கடி? நானும் போறன். டேய் வாடா கணேஷ். மதியா தார் முத்தம் மிதிக்கப்படாது. (ராமலிங்கம் போகிறார்).

செல் : மகான், நீ வாமோனை சாப்பிட.

(இருவரும் உள்ளே போக கணேசன் தனித்துவிடப்படு கிறான். அப்பொழுது பண்டிதர் பரமலிங்கம் வருகிறார்).

பண் : (தனக்குள்) இல்லின் உரிமையாளர்கள் எவருமில்லைப் போல் தோன்றுகிறது.

கணே : ஓய் பண்டிதர். என்ன, கண்டாலும் காணாதமாதிரி நிக்கிறீர்? ஆரைத் தேடுகிறீர்? எங்களைக் கண்ணுக்குத் தெரியாது என்ன.

பண் : மகனே. கனவிலும் இன்னாது மன்னோ வினை வேறு சொல் வேறுபட்டார் தொடர்பு என்கிறார் வள்ளுவப் பெருந்தகை.

கணே : நான் உம்மட்டைக் குறள் படிக்க வர இல்லை. எனக்கது விளங்கவும் இல்லை.

பண் : ஐயகோ, குறள் விளங்காததால் இப்படிப் பேசினை. சொல்லும் செயலும் ஒன்றோடு ஒன்று பொருந்தாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு வேறாய் இருப்பவர்களடைய நட்பு, நினைவில் மாத்திரமன்றி கனவிலும் தீமை பயக்கும் என்று எம் பெருமான் வள்ளுவர் இயம்புகிறார்.

கணே : வள்ளுவர் இயம்பட்டும். நீர் என்ரை விஷயத்திலை அனாவசியமாய்த் தலைப்போடுறீர் எண்டு கேள்விப் படுகிறன். என்னைப் பற்றிச் தெரிஞ்சிருப்பீர், கவனமாக யிரும்.

பண் : ஐயகோ, இதுவென்ன விபரீதம். யாம் தவறொன்றும் செய்யவில்லையே.

கணே : ஏன் செய்ய இல்லை. மாலதிக்கும் மகாலிங்கத்துக்கும் கலியாணம் கட்டி வைக்கிறது உம்முடைய பொறுப்பு எண்டு சொன்னீராம்.

பண் : காளையும் விரும்புகிறன். கன்னியும் இசைந்துவிட்டாள். ஒன்று சேர்த்து வைத்தல் என்போன்றோர் கடனன்றோ.

கணே : நானும்தான் மாலதியை விரும்புறன். அப்ப எனக்குக் கட்டிவையுமன்.

பண் : அந்தோ, அது பாபமன்றோ. நீவிர் அப்பெண்ணை விரும்பினும், அப்பெண் உம்மை நாடுகின்றனளா?

கணே : நீர் நாடவையும், அடிக்குமேலடி அடித்தால் அம்மியும் நகரும்.

பண் : அம்மியை நகர்த்திவிடலாம். அது ஜடப்பொருள். ஆனால் அப் பெண்மணியோ உயிர் உள்ளவளன்றோ.

கணே : நீர் மனம் வைச்சால் எல்லாம் நடக்கும்.

பண் : மன்னிக்கவும். மாலதி மகாலிங்கம் நட்பு அத்தகைய தல்லவே. இருவரும் ஒருமனப்பட்டுவிட்டனரே. அதைச் சிதைப்பது அடியேனால் ஆகாது அப்பனே.

கணே : ஆக வைப்பன் நான்.

பண் : அடித்துக் கனியவைக்கும் கனியில் சுவையை எதிர்பார்க்க முடியாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணே : அதைப்பற்றி ஏன நீர் கவலைப்படுறீர். நீர் நினைச்சால் கனியவைக்க முடியும்.

பண் : எம்மால் முடியாதவற்றைப் பொறுப்பேற்கமாட்டோம். எம்மை மன்னிக்கவும்.

கணே : அப்ப எனக்கு உதவி செய்யமாட்டீர்?

பண் : முழுமனதோடு உதவுகிறோம். நுமது தீய பழக்க வழக்கங் களை அறிவே ஒழித்து, சான்றோர் போற்றும் வகையில் உம்மை மாற்றித் தருகின்றோம். திருக்குறள் வேதத்தை ஓதுகின்றோம். அவற்றைக் கவனமாகக் கற்றுத் தெளிந்தால் போதும்.

கணே : ஓய், உம்முடைய திருக்குறளைக் கொண்டு போய்க் குப்பையிலை போடும். எனக்குத் தேவை தேன்மொழியாள் மாலதி. அவளை எனக்குக் கட்டிவைக்க முடிவுமோ முடியாதோ?

பண் : யாம் கல்யாணத் தரகர் வேலை பார்ப்பதில்லையே.

கணே : மகாலிங்கத்துக்கு மட்டும் தூது போவீர். பண்டிதர் என் னோடை பகைச்சால் இந்த ஊரிலை நிம்மதியாய் வாழ மாட்டீர்.

பண் : தங்கள் அறிவுரைக்கு நன்றி. எம்வழியில் எம்மை போக விட்டால் யாம் மகிழ்வோம்.

கணே : இந்தாரும், இதிலை நூறு ரூபாய் இருக்கு. இது அட்வான்ஸ். மாலதி என்ரை வழிக்கு வந்தால் மொத்தமாக உமக்கு ஆயிரம் ரூபா அன்பளிப்புச் செய்வன்.

பண் : அன்பளிப்பு என்ற வார்த்தையை அவமதியாதே மகனே. இலஞ்சம் வாங்கும் பண்பும் எம்மிடம் இல்லை. பணத்தைக் கண்டு பல்லிளிக்கும் பரம்பரையிலும் யாம் உதிக்கவில்லை.

கணே : பண்டிதர், மரியாதையாக என்ரை சொல்லுப்படி நடக்கப் போறீரோ இல்லையோ?

பண் : மாட்டோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணே : உம்மைச் சும்மா விடமாட்டன்.

பண் : உமக்காகப் பரிதாபப்படுகின்றோம். அன்பினால் உலகத்தை வெல்ல முடியும் மகனே. அதிகாரத்தால் முடியாது. அன்பின் வழிய(து) உயிர் நிலை அது இல்லார்க்(கு) என்பு தோல் போர்த்த உடம்பு புரிகின்றதோ?

கணே : எனக்குப் புரியத்தேவை இல்லை. பண்டிதர், நான் மாலதியைக் கலியாணம் கட்டுறதை வலுகெதியிலை நீரும் பார்க்கத்தான் போறீர். நான் வாறன்.
(கணேசன் கோபமாகப் போகிறான்)

பண் : யாம் வந்த வேளை சரியில்லைப் போலும். யாம் சென்று பின்னர் சிவப்பிரகாச அன்பரைச் சந்திப்போம்.
(பண்டிதரும் போகிறார்)
(மகாலிங்கம் வெளியே வருகின்றான்)

மகா : (தனக்குள்)ம் இவள் மாலதியைப் பார்க்காமல் இருக்க முடிய இல்லையே. ஆனால் பண்டிதருக்கு குடுத்த வாக்கையும் மீறக் கூடாது. அப்பிடி மீறனபடியால் தானே அண்டைக்கு கணேசனிட்டை வாங்கிக் கட்டினான். இதுக் குத்தான் மூத்தோர் சொல்வார்த்தை அமிர்தம் எண்டு சொல்லுறவை. எண்டாலும் இப்ப எவ்வளவு நாள் மாலதியைக் காணயில்லை.

அவளுக்கும் என்னைப் பார்க்க ஆசையாய் இருக்குந் தானே. சில வேளை நான் போய்ப் பார்க்காவிட்டால் கோவிச்சாலும் கோவிப்பாள். கோவிச்சால் என்னை மறந்திடுவாள்....ம்....ஆ அதுக்கும் ஒரு வழி கண்டுபிடிச் சிட்டன். மாலதி வீட்டிலை டெலிபோன் இருக்கிறது.

(மேடை இருளடைகிறது)

(திரை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காட்சி 6**

(மார்க்கண்டர் வீட்டில் டெலிபோன் மணி அடிக்கிறது. சோமு வந்து டெலிபோனை எடுக்கிறான்)
(மகாலிங்கத்தின் குரல் ஒலிபெருக்கிமூலம் கேட்க வேண்டும்)

சோமு : ஹலோ..... ஹலோ

மாக : ஹலோ, ஆர் பேசுறது?

சோமு : அது நான் சோமு பேசுறன்.

மாக : மாலதி இல்லையோ?

சோமு : மாலதித் தங்கைச்சி படிச்சுக்கொண்டிருக்குது.

மகா : ஒருக்கால் பேசச்சொல்லு.

சோமு : ஆர் அங்கை பேசுறது?

மகா : நான் மகாலிங்கம் பேசுறன்.

சோமு : (உரத்து) தங்கைச்சி, உங்களுக்கு டெலிபோன் வந்திருக்கு. (மாலதி வந்து போனை வாங்குகிறாள்)

மகா : ஹலோ, ஆர் பேசுறது.....?
(தனக்குள்) டெலிபோனுக்குள்ளாலை தேன் வடியுறது மாதிரி இருக்கு. (உரத்து) ஹலோ, அது நான் மகான் பேசுறன்.

மாலதி : ஹலோ மகான். நீங்கள் என்னை மறந்திட்டீங்களாக்கும் எண்டு நினைச்சன்.

மகா : ஐயோ, அப்படிச் சொல்லாதை மாலதி. நான் உன்னை மறப்பனே. உன்னைப் பார்க்க வந்தால் அடிவாங்க வேண்டியிருக்கு.

மாலதி : மகான் உங்கடை விரதம் எப்ப முடியும். பை த பை கொங்க்ராஜுலேசன்.

மகா : என்னது.....?

மாலதி : என்னுடைய வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகா : என்னத்துக்கு வாழ்த்து?

மாலதி : உத்தியோகம் கிடைச்சிருக்காம்.

மகா : உத்தியோகத்துக்கு நான் போனாலல்லோ வாழ்த்த வேணும்.

மாலதி : அப்ப.....

மகா : நான் வள்ளுவன் வகுத்த பாதையிலை வாழப்போறன். இந்தக் கைகட்டிச் சேவகம் புரியிற தொழில் எனக்குத் தேவை இல்லை.

மாலதி : உங்களுக்கு என்ன பைத்தியம் பிடிச்சுட்டுதா?

மகா : மாலதி, நீ ஒரு ஆள்தான் இதுவரையிலை எனக்குப் பைத்தியம் எண்டு சொல்லாத ஆள். இண்டைக்கு நீயும் சொல்லிப்போட்டாய். பறவாயில்லை. நான் பைத்திய மாகவே இருந்திட்டுப் போறன்.

மாலதி : ஐ ஆம் சொறி மகான். தெரியாமல் சொல்லிப்போட்டன், மன்னிச்சுக் கொள்ளுங்கோ.

மகா : ஆறுதலாய்க் கதைக்கிறாய். வீட்டிலை அப்பா இல்லையே?

மாலதி : டடி வெளியிலை போட்டார். அவருக்கு உங்களிலை நல்ல விருப்பம் மகான். எந்த நேரமும் உங்களைப் பற்றித்தான் கதைச்சுக் கொண்டிருப்பார்.

மகா : அப்ப உனக்கு விருப்பமில்லையோ?

மாலதி : (டெலிபோனைப் பார்த்து கேலியாக) என்ரை விருப்பந் தான் உங்களுக்குத் தெரியுமே. ஆனால் உத்தியோகத் துக்குப் போகாவிட்டால் நான் உங்களோடை கதைக்க மாட்டன்.

மகா : மாலதி, அவசரப்படாதை மாலதி, கடவுளே எண்டு சொந்த நிலமிருக்கு. வலுவான கால்கை இருக்கு. தன்னம்பிக்கை இருக்கு. இவ்வளவும் இருக்கத்தக்கதாக என்னை ஒரு கூலிக்காரன் ஆக்கப் பாக்காதை பிளீஸ்...

மாலதி : உத்தியோகம் பாக்கிறவை எல்லாம் கூலிக்காரரே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகா : நிச்சயமாய், வெள்ளை உடுப்புப் போட்டுக் கூலிவேலை செய்யிறவை. உடம்பை வருத்தாமல் மற்றவைக்கு அடி பணிஞ்சு வாழுறவை.

மாலதி : அப்ப என்னத்துக்கு படிச்சனீங்கள். ஏன் உத்தியோகத் துக்கு அப்பிளிக்கேஷன போட்டனீங்கள்?

மகா : அருமையான கேள்வி? படிச்சனான், அறிவு கிடைக்கிற துக்கு. அப்பிளிகேஷன் போட்டனான் உத்தியோகம் பார்க்கிற தகுதி எனக்குமிருக்கு எண்டு மற்றவையை உணரவைக்கிறதுக்கு.

மாலதி : நீங்கள் என்னத்தைச் சொன்னாலும் மற்றவை உங்களை மதிக்க மாட்டினம். கூலிக்காரன் எண்டு பழிப்பினம். பகுடி பண்ணுவினம். எங்கடை சமுதாயம் அமைப்பு அப்பிடி.

மகா : தெரியும் மாலதி. இந்தச் சமுதாய அமைப்பை மாத் திக்காட்டுறத்துக்கு நான் ஒரு வழிகாட்டியாக இருக்கப் போறன். மற்றவையைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. நீ என்னைப் பகிடி பண்ணாவிட்டால் போதும்.

மாலதி : நான் பகிடி பண்ணமாட்டன். ஆனால் டடிதான் என்னை உங்களுக்குக் கட்டி வைக்கமாட்டார்.

(மார்க்கண்டர் வருகிறார்)

மார் : மாலதி.... மாலதி.....

மாலதி : ஹலோ மகான், டடி வந்திட்டார். நீங்கள் பிறகு டெலிபோன் பண்ணுங்கோ.

(டெலிபோனை வைத்துவிட்டு தகப்பனிடம் வருகிறாள்)

மார் : மாலதி, ஆர் போன் பண்ணினது?

மாலதி : உங்கடை மாகன்.

மார் : என்ரை மகானோ. (சிரித்து) ஆ. என்னவாம்?

மாலதி : நான்தான் சொன்னனே, அது ஒரு பைத்தியம் எண்டு.

மார் : ஷட் அப்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலதி : டடி.

மார் : மாலதி. ஹி இஸ் நொட் மாட். அவனுக்குப் பைத்தியமில்லை.

மாலதி : கிளறிக்கல் சேர்வீசுக்கு எடுபட்டிருக்கிறார். ஆனால் வேலைக்குப் போகமாட்டாராம். இந்தக் காலத்திலை இப்பிடி ஒரு சான்ஸ் கிடைச்சும் அதை வேண்டாம் எண்டு ஒதுக்கிறவை பைத்தியம் தானே டடி.

மார் : நோ..... நொட் அற் ஓல். இப்பிடியான தன்னம்பிக்கையுள்ள துணிச்சல் காரர்களாலைதான் இந்த நாடு முன்னேற முடியும்.

மாலதி : நீங்கள் என்ன சொல்லுறியள் டடி.

மார் : நீ புத்தகத்தை எடுத்துப் படி

மாலதி : (செல்லமாகச் சிணுங்கியபடி) சொல்லுங்கோட டி.

மார் : எனக்கு எல்லா விஷயமும் தெரியும் மாலதி. ஐ ஆம் வெரி பிறவுட் ஒப் ஹிம். ஹி வில் பி மை சன் இன் லோ வெறி சூன்.

மாலதி : நெவர், ஒருக்காலும் நடக்காது டடி.

மார் : மகாலிங்கம் தான் இந்த வீட்டுக்கு மருமகனாக வர வேணும்.

மாலதி : டடி, இப்ப என்னத்துக்கு இந்தப் பேச்சுக்கள். இன்னும் நான் சோதனையே பாஸ் பண்ண இல்லை.

மார் : பாஸ் பண்ணவேண்டாம். நீ அந்த மகானைத்தான் கலியாணம் கட்டப்போறாய்.

மாலதி : கனவிலையும் அது நடக்காது டடி. அந்தப் பைத்தியத்தை நான் கலியாணம் கட்டமாட்டன்.

மார் : அப்ப எதுக்காக அவனோடை குழைஞ்சு குழைஞ்சு பேசுறாய். அவனுக்கு அப்பிடி ஏன் ஒரு ஆசையை ஏற்படுத்தினாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலதி : இதென்ன டடி நீங்கள் இண்டைக்குப் பேசுற பேச்சு. எல்லா விஷயமும் தான் உங்களுக்குச் சொல்லிப் போட் டனே. நான் இப்ப டெலிபோனிலை கூட சும்மா அவ ரோடை வேடிக்கையாகத்தான் பேசினனான்.

மார் : 'பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு சீவன் போகுது' எண்டு ஒரு பழமொழி. அதுபோலை உனக்கு வேடி க்கையாக இருக்கலாம் மாலதி. ஆனால் அவன் அதை உண்மையெண்டே நம்புறான். உன்னை மனப்பூர்வமாக விரும்புறான்.

மாலதி : டடி, என்னை விரும்புற எல்லாரையும் கலியாணம் கட்ட முடியுமா? அந்தக் காவாலி கணேசன் கூட எனக்குப் பின்னாலையும் முன்னாலையும் திரியிறான். அதுக்காக அவனைக் கலியாணம் கட்ட முடியுமா?

மார் : மாலதி, டோன்ற் ரோக் றபிஷ். நான் சொல்லுற படிதான் நீ நடக்க வேணும். அண்டஸ்ரான்ட்.

மாலதி : ஐ ஆம் சோ சொறி. என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கள் டடி.

மார் : மாலதி, ஓல் றயிற். உன்ரை மனசிலை வேறை ஆரை யாவது நினைச்சு வச்சிருக்கிறியா?

மாலதி : இல்லை சத்தியமாக இல்லை டடி.

மார் : அப்படியெண்டால், மகான்தான் உனக்கு மாப்பிள்ளை.

மாலதி : (அழுது) அசட்டு மாப்பி'ளளை. (உள்ளே போகிறாள்) (பண்டிதர் பரமலிங்கம் வருகிறார்)

பண் : ஐயா..... ஐயா... பென்சனியர் ஐயா.

மார் : ஹீ இஸ் தட், ஓ.... பண்டிட்... கம் இன்.

பண் : வருகிறோம் வருகிறோம்

மார் : அக்சுவலி, வள்ளுவர் இஸ் ஏ கிறேட் பெலோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண் : நீங்கள் வள்ளுவரைப் பற்றி ஏதோ இயம்புகின்றீர்கள். எமக்கோ அது என்னவென்று புலப்படவில்லை. வேற்று மொழி தெரியாததால் வேதனையடைகிறோம்.

மார் : பண்டிட் இந்த வள்ளுவர் ஒரு பெரிய மேதை.

பண் : ஆகா ஆகா என் காதுகள் குளிருகின்றன. இன்றாவது வள்ளுவனின் ஆற்றலைப் புரிந்தமை கேட்டு அக மகிழ்ந்தோம். மார்க்கண்டு ஐயா அவர்களே

மார் : சொல்லுங்கோ.

பண் : இந்த மனமாற்றம் ஏற்படக் காரணம் யாதோ?

மார் : இந்தக் குறளைக் கவனமாகப் படிச்சால், அது ஆளையே மாத்திப்போடும் பண்டிதர்.

பண் : அப்படியாயின் நீவிர் குறளை அதி சிரத்தையுடன் கற்கின்றீர் என்று தெரிய வருகிறது.

மார் : ஓய், நான் என்னைப் பற்றிச் சொல்ல இல்லைக் காணும், மகாலிங்கத்தைப் பற்றிச் சொல்றுறன். அவன் உண்மை யிலேயே ஒரு மகானாக வருவான்.

பண் : திருக்குறள் கற்றால் மட்டும் போதாது, கற்றதன்படி ஒழுக வேண்டும்.''கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக'' என்றார். வள்ளுவர் எனவே கற்றதன்படி ஒழுக வேண்டும்.

மார் : மகாலிங்கம் அப்பிடித்தான் காணும் ஒழுகுகின்றான். ஆனால் மாலதியைப் பார்த்துத்தான் அழுகிறான்.

பண் : தாங்கள் இயம்புவது அடியேனுக்குப் புரியவில்லை ஐயனே.

மார் : பண்டிட், மகாலிங்கத்துக்கு கிளறிக்கல் வேலை கிடைச் சிருக்கு. ஆனால் திருக்குறள் படிச்சதாலை அவன் உத்தி யோகத்தை ஏற்றுக்கொள்ள மறுத்திட்டான்.

பண் : அப்படியா? மகானன்றோ. பண்பின் சிகரம்.

மார் : மாலதி... மாலதி ...... (மாலதி வருகிறாள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலதி : என்ன டடி.

மார் : சோமுவைக் கூப்பிட்டு பண்டிதர் ஐயாவுக்கு குடிக்க ஏதாவது கொண்டுவரச் சொல்லு. (போகிறாள்).

மாலதி : நீர் அன்றேல் மோர்..... வேறொன்றும் வேண்டாம் மகளே.

மார் : பண்டிட், மகாலிங்கத்தை நான் பாராட்டுகிறன் இவன் இந்த ஊருக்கே முன்மாதிரியாக இருக்கப் போறான். ஐ லைக் ஹிம் வெறி மச். நான் அவனை விரும்புறன். ஹி வில் பி மை சன் இன்லோ.

பண் : மகிழ்ச்சி எல்லை கடந்து ஐயாவின் வாயில் லல்லா பாடலாக வெளிவருகின்றதோ.

மார் : இல்லை. மகாலிங்கம் தான் என்ரை சன் இன் லோவாக வரவேணும். அதாவது மருமகனாக வரவேணுமெண்டு ஆசைப்படுகிறன். ஆனால்...........

பண் : ஆனால் என்ற அணுகுண்டு ஏனோ? நும் மருமகனாக வர யாம் ஆசீர்வதிக்கின்றோம்.

மார் : ஆனால், மாலதிக்கு அவனைக் கலியாணம் கட்ட விருப்ப மில்லைப் போலத் தெரியுது.

பண் : ஐயகோ, அபத்தம்......... அபத்தம்... இருவரும் ஒரு மனதினர் ஆகிவிட்டனரன்றோ?

மார் : அப்பிடித்தான் நான் இவ்வளவு நாளும் நினைச்சுக் கொண்டிருந்தனான். ஆனால் இண்டைக்கு உண்மை தெரிஞ்சுபோச்சு. மாலதி மகாலிங்கத்தை விரும்பவே யில்லை. அவனை ஒரு அசடன் எண்டு நினைக்கிறாள். ஆனால் அவன் அசடன் இல்லை.

பண் : மார்க்கண்டு ஐயா அவர்களே, எம்மால் இதை நம்ப முடியவில்லை. (சோமு மோர்கொண்டு வருகிறான்)

சோமு : இந்தாருங்கோ பண்டிதர் ஐயா.

பண் : நீரா மோரா?

சோமு : மோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண் : தாம்புலம் தரித்த வாய். அலம்புவதற்கு சிறிது நீரும் கொண்டு வருக.

சோமு : செம்பிலை தண்ணியும் கொண்டு வந்திருக்கிறன்.

பண் : புத்திசாலி சோமு, மாலதியை யாமழைப்பதாக இயம்புவாயா?

சோமு : சரி ஐயா (போகிறான்)

பண் : நும் புத்திரியுடன் யாம் சற்றே உரையாட வேண்டும்.

மார் : உயையாடுங்கோ வாறன்
(மார்க்கண்டர் உள்ளே போக மாலதி வெளியே வருகிறாள்)

பண் : குழந்தாய், நின்னைப்பெற்ற தந்தையார் நின்பொருட்டு சற்றே கவலையடைந்துள்ளார். தந்தையின் கவலையைப் போக்குவது நின்கடமையன்றோ.

மாலதி : என்ன கவலை பண்டிதர் ஐயா. மகானைப் பற்றியது தானே. அந்த விசரைக் கலியாணம் கட்டச் சொல்லுறார் டடி. நான் அதுக்கு எப்படிச் சம்மதிக்கிறது. நீங்களே சொல்லுங்கோ பாப்பம்.

பண் : தவறு மகளே, நின் யூகம் தவறு. மகாலிங்கத்தைப் போன்ற அறிவாளியை மணவாளனாக அடைய நீர் பாக்கியம் செய்திருக்க வேண்டும்.

மாலதி : அவரைக் கலியாணம் முடிச்சால் நான் றோட்டலை தலை நிமிர்ந்து நடக்கேலாது.

பண் : மகானை மணமுடித்தால் நீர் நடந்துபோக வேண்டிய அவசியமே வராது மகளே.

மார் : (வெளியே வந்து கொண்டு) சோமு என்னோடை வா. மார்க்கெற்றுக்குப் போயிட்டு வருவம்.

பண் : மார்க்கண்டு ஐயா, யாமும் தங்களுடன் வருகின்றனம்.

மார் : வாரும்... வாரும்....
(மூவரும் போகின்றனர். மாலதி மேசையில் இருந்த புத்தகத்தை எடுத்துப் படிக்கிறாள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(மேசை மீது பாம்பு ஒன்று விழுகிறது. மாலதி பயந்து கதறுகிறாள். அப்பொழுது கணேஷ் அங்கு வருகிறான்)

மாலதி : ஐயோ பாம்பு...... பாம்பு.....

கணே : எங்கை மாலதி பாம்பு.....
(பாம்பைக் கண்டு பயந்து பின் வாங்குவதுபோல் நடித்து விட்டு தடி ஒன்றினால் பாம்மை அடித்து, தூக்கி வெளியே எறிந்து விடுகிறான்)

கணே : நல்ல வேளை நானும் வந்தன். இல்லாவிட்டால் பாம்பு வாய் வைச்சிருக்கும்.

மாலதி : தாங்கஸ் கணேஷ். நான் நல்லாய்ப் பயந்து போனன். எங்கை இருந்து அந்தப் பாம்பு வந்ததெண்டு தெரிய இல்லை. நான் நினைக்கிறன் ஓட்டிலை இருந்துதான் விழுந்திருக்குமெண்டு.

கணே : (சமாளித்து) ஓமோம், அப்பிடித்தான் இருக்க வேணும். இது பழைய வீடுதானே. அது சரி டடி எங்கை மாலதி?

மாலதி : அவர் மாக்கெற்றுக்குப் போய்விட்டார்.

கணே : உங்கடை வேலைக்காரன் சோமு?

மாலதி : அவனும் கூடப் போயிட்டான்.

கணே : அப்ப நல்ல நேரம் பார்த்துத்தான் நானும் வந்திருக்கிறன்.

மாலதி : என்னது?

கணே : இல்லை மாலதி ஒருதரும் இல்லாத நேரத்லை இந்தப் பாம்பு வந்திருந்தால், நீ எவ்வளவு அந்தரப் பட்டிருப்பாய். இன்னும் நடுக்கம் மாற இல்லைப் போல இருக்கு.
(மாலதியின் கையைப் பிடிக்க, அவள் கையை உதறிக் கொண்டு)

மாலதி : மிஸ்டர் கணேஷ் கொஞ்சம் நாகரீகமாக நடந்து கொள்ளுங்கோ.

கணே : இந்தக் காலத்திலை நன்மைக்குக் காலமில்லை. ஆபத்து நேரத்திலை தெய்வம் மாதிரி வந்து காப்பாற்றியிருக்கிறன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுக்கிடையில் மறந்திட்டாய் என்ன? இந்தப் பெட்டையளே நன்றி இல்லாத ஜென்மங்கள்.

மாலதி : பெட்டையளுக்கு மானந்தான் பெரிசு.

கணே : இப்ப மானம் போற விதமாக என்ன செய்துபோட்டன். நடுங்குதோ எண்டு கையிலை தொட்டுப் பாத்தன் அது தவறே?

மாலதி : ஆகா எவ்வளவு அக்கறை.

கணே : டொக்டர்மார் தொட்டுப்பாக்கினம். நான் தொட்டால் தான் மானம் பறக்குமாக்கும்.

மாலதி : எல்லாம் தொடுகிற விதத்திலை இருக்கு மிஸ்டர். ஏதோ தற்செயலாக வந்த இடத்திலை, உங்கடை வீரத்தைக் காட்டுறதுக்கு ஒரு பாம்பு வந்திட்டுது. நீங்கள் வந்த விஷயம்.

கணே : உன்னைப் பாக்கத்தான்.

மாலதி : என்ன?

கணே : என்ன மாலதி. ஒரு வயதுப் பொம்பிளையைத் தேடி என்னைப் போலத் துணிச்சல்கார வாலிபன் எதுக்கு வருவான்?

மாலதி : என்ன மிஸ்டர் கணேஸ் வாய் நீளுது.

கணே : நாங்கள் எல்லாம் படிச்ச பிள்ளைகள். எதுக்கு சுத்தி வளைக்க வேணும்.

மாலதி : அதுதானே, வந்த விஷயத்தை நேரே பேசலாமே.

கணே : பேசலாம் தான்....

மாலதி : துணிச்சல் வர இல்லையாக்கும். எங்கட டடி இருக்கிறார் கராட்டி படிச்சவர்.

கணே : மாலதி இப்ப அதை ஏன் ஞாபகப் படுத்துகிறாய். எனக்கு உன்னிலை.....

மாலதி : லவ் வந்திருக்குதாக்கும்... காதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணே : அது தான்.... அது தான்....

மாலதி : ஐ ஆம் சொறி.

கணே : என்னது.

மாலதி : எனக்கு காதல் வர இல்லை.

கணே : அப்ப அந்த அசடு மகாலிங்கத்தைத்தான் கலியாணம் கட்டப் போறியாக்கும்.

மாலதி : (சிரிக்கிறாள்)

கணே : ஏன் சிரிக்கிறாய் மாலதி?

மாலதி : நான் உங்களை லவ் பண் இல்லையெண்டால் போக வேண்டியது தானே. பிறகேன் நிக்கிறியள்?

கணே : இல்லை அந்த அசடனை விட எந்த விதத்திலை நான் குறைவு எண்டு கேக்கிறன்.

மாலதி : தேவை இல்லாத கேள்வி.

கணே : என்னடி பெரிய ஆள் மாதிரிக் கதைக்கிறாய்.

மாலதி : ஐ சே யு கெட் அவுட்.

கணே : மாலதி (கையைப் பிடிக்கப் போகிறான். மாலதி கையைத் தட்டி விட்டு கணேசனின் கன்னத்தில் அறைந்துவிடுகிறாள். மகாலிங்கம் சிரித்துக் கொண்டே உள்ளே வருகிறான்).

மகா : ஹி... சபாஷ் மாலதி, நீ வெறும் அழகி எண்டுதான் நினைச்சிருந்தன். ஆனால் நீ இவ்வளவு துணிச்சல்காரி எண்டது இண்டக்கித்தான் தெரியும்.

மாலதி : ஹலோ மகான், இப்பதான் வந்தனீங்களா?

மகா : இல்லை..... இல்லை... மச்சான் கணேசன் இங்கை வந்த நேரமே நானும் வந்திட்டன். இங்கை நடந்ததெல்லாத்தையும் நானும் பார்த்துக்கொண்டுதான் நிண்டநான்.

மாலதி : அப்பிடியா?

மகா : மச்சான் கணேஷ். எங்கடை முருகக் கடவுள் வள்ளியைக் கலியாணம் முடிக்கிறதுக்கு ஆனையைப் பயன்படுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினார். கொல்லவந்த சிங்கத்தைக் கொலை செய்து சத்தியவான் சாவித்திரியைக் கலியாணம் முடிச்சார். நீ ஒரு றப்பர் பாம்பைக் கொண்டு வந்து மாலதியை வெருட்டிப் பார்த்தும் முடியாமல் போச்சு.

மாலதி : என்ன றப்பர் பாம்போ?

மகா : பின்னை என்ன, உண்மையான பாம்பைக் கண்டால் கணேஷ் கிட்ட நிப்பானே?
(பின்னால் மறைத்து வைத்திருந்த றப்பர் பாம்பை எடுத்துக் காட்டுகிறான்)
இங்கை இருக்கு மச்சான் நீ கொண்டு வந்த றப்பர் பாம்பு. மச்சான் கணேஷ், நீ கொண்டுவந்து யன்னலுக் குள்ளாலை எறியேக்கையும் நான் பார்த்தனான்.

மாலதி : சீ வெட்கமில்லை. இன்னும் எந்த முகத்தோடை இங்கை நிற்கிறீர் கணேஷ்.

கணே : போறன்... போறன்.. உண்மைக் காதலர்களை நான் குழப் புறது பாவம். டேய் மகான் உன்னைச் சும்மா விடமாட் டன்ரா....

மகா : அண்டைக்குக் கண்கட்டியிருந்ததாலை நீ சொட்டிப் போட்டுத் தப்பி ஓட விட்டிட்டன். இண்டைக்குக் கண் திறந்துதானிருக்கு. வீணாக வாங்கிக் கட்டாமல் மரி யாதையைக் காப்பாற்றிக் கொண்டு போ.

மாலதி : மரியாதை இருந்தாலெல்லோ காப்பாத்துறத்துக்கு....

கணே : (ஆத்திரத்துடன்) என்னடி.

மகா : ம்... கணேஷ்....

கணே : போறன்ரா போறன். உங்களைச் சந்திக்கிற இடத்திலை சந்திக்கிறன். (கணேசன் போகிறான்).

மகா : சரிதான் போடா..... அவன் கிடக்கிறான் மாலதி. எண்ண டாலும் நீ இந்த றப்பர் பாம்புக்கு இவ்வளவு பயந்ததை நினைக்கத்தான் சிரிப்பாய்க் கிடக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலதி : அதுசரி மகான் உங்கடை விரதம் முடிஞ்சுதோ?

மகா : ஓ, இனிமேல் உன்னைப் பாக்காமல் எண்டு இப்ப தான் பண்டிதர் சொன்னார். உடனை வந்தன். நல்லதாய்ப் போச்சு.

மாலதி : அப்பிடியே?

மகா : மாலதி, நான் உன்னோடை கோபம்.

மாலதி : ஏன் மகான்?

மகா : எங்கடை அம்மா சொல்லுறா. நீ உண்மையாக என்னை விரும்ப இல்லையாம். என்னை விசரன் எண்டு நினைச்சுக் கொண்டு என்னைப் போய்க்காட்டுறத்துக்காக கலியாணம் முடிக்கப் போறன் எண்டு பொய் சொல்லுறியாம். உண்மையே மாலதி?

மாலதி : (வெம்பி வெம்பி அழுகிறாள்) மகான்.

மகா : மாலதி விருப்பம் இல்லாட்டால் எனக்கு முன்னாலை சொல்லிப் போடாதை. என்னாலை தாங்கேலாது. அழாதை மாலதி... நீ அழுதால் எனக்கும் அழுகை வரும்.

மாலதி : மகான் (அழுகிறாள்)

மகா : அழாதை, இந்தா, என்ரை தோட்டத்துக் கப்பல் வாழைப் பழம். சாப்பிடு. உன்ரை டடிக்கும் அவன் சோமுவுக்கும் குடு.
(சோமு மரக்கறிச் சாமான்களுடன் வருகிறான்)

சோமு : ஐயாவுக்கு என்னிலை நல்ல விருப்பம் போலை இருக்கு.

மகா : சோமு, என்னவோ தெரியஇல்லை. உன்னைக் கண்டால் எனக்கு இரக்கம் வருகுது.

சோமு : இந்தச் சமான்களை உள்ளை வைச்சிட்டு வாறன் ஐயா. (உள்ளே போகிறான்).

மாலதி : சோமு, பிளாஸ்கிலை கோப்பி இருக்கு. எடுத்துக் கொண்டு வா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகா : வேண்டாம் மாலதி. நான் போகப் போறன். ஆரும் வந்தால் வித்தியாசமாய் நினைக்கப் போகினம். டடி நிற்கிற நேரமாய் வாறன்.

மாலதி : வரவேண்டாம் மகான். நீங்கள் இனி இந்த வீட்டுக்கு வரவேண்டாம்.

மகா : மாலதி.... நீ என்ன சொல்லுறாய்?

மாலதி : என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ மகான். இனிமேல் என்னைச் சந்திக்க வேண்டாம்.

சோமு : (வந்துகொண்டே) தங்கைச்சி.... இண்டைக்கு உங்களுக்கு என்ன பிடிச்சிருக்கு. இந்த ஐயாவின்ரை மனதை நோகப் பண்ணுறது பெரிய பாவம் தங்கைச்சி....

மகா : சோமு.....

சோமு : கோப்பியை குடியுங்கோ ஐயா. தங்கைச்சி

மாலதி : (அழுகிறாள்)

மகா : அழாதை மாலதி. என்னை உனக்குப் பிடிக்க இல்லை. அவ்வளவு தானே?

மாலதி : என்னை ஒண்டும் கேட்க வேண்டாம் மகான்.

மகா : பறவாயில்லை மாலதி. அம்மா சொன்னது உண்மையாய்ப் போச்சு. நான் போறன்.....

சோமு : கோப்பி....

மகா : வேண்டாம் சோமு. மாலதி, நான் உன்னை உயிருக்கு யிராக விரும்பினன். நீயும் அப்பிடித்தானிருப்பாய் எண்டு ஏமாந்தன். பறவாயில்லை. ஆனால் எண்டைக்கும் உன்ரை அன்பை என்னாலை மறக்க முடியாது. அதினாலை உன்ரை விருப்பத்தை நிறைவேற்றுறது தான் இனி என்ரை வேலை. நான் போறன்.

மாலதி : (அழுகிறாள்)

மகா : மாலதி, நீ அழக்கூடாது. நான் வாறன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோமு : (குலுங்கிக்குலுங்கிக் அழுகிறான்)

மகா : சோமு, நீ ஏன் அழுகிறாய். வள்ளுவர் சொல்லி இருக்கிறார். இடுக்கண் வருங்கால் நகுக எண்டு. என்னைப் பாத்தியே. எவ்வளவு துன்பத்தை மனதுக்குள்ளை அடக்கி வைச்சிருக்கிறன். அழாதை.

சோமு : ஐயா, தங்கைச்சி ஏதோ இண்டைக்கு இப்படியெல்லாம் பேசிப்போட்டுது. ஆனால் அதுக்காக நீங்கள் கோவிச்சுக் கொண்டு போகக்கூடாது ஐயா.

மாலதி : சோமு, நீ போ உள்ளை, உனக்குச் சுதந்திரம் கூடிப் போச்சு.

சோமு : நீங்கள் என்னை வேலைக்காறன் மாதிரி நடத்தியிருந்தால் இப்பிடியெல்லாம் பேசி இருக்கமாட்டன். சொந்த அண்ணன் மாதிரி பழகியிட்டியள். அந்த உரிமையிலை ஏதோ, தெரியாமல் சொல்லிப்போட்டன். என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ தங்கைச்சி ஐயா, நீங்களும் என்னை மன்னிச்சுக்கொள்ளுங்கோ.

(உள்ளே போகிறான்).

மகா : மாலதி, நீ இவ்வளவு நேரமும் கதைச்சதுகளை என்னாலை நம்ப முடிய இல்லை. உண்மையிலை நீ என்னை விரும்ப இல்லையா மாலதி.
(மாலதி குமுறி அழுதுகொண்டு உள்ளே ஓடுகிறாள்)
(மகாலிங்கம் தளர் நடையடன் வெளியேற மார்க்கண்டர் உள்ளே வருகிறார்)

மார் : சோமு... சோமு....

சோமு : என்ன ஐயா.

மார் : என்ன மகாவலிங்கம் ஒரே சோகமாகப் போறான். மாலதி எங்கை?

சோமு : ஐயா, தங்கைச்சி அழுது கொண்டிருக்குது.

மார் : வை... வை.... வட் ஹப்பின்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோமு : ஐயா உங்கடை மகன் மாதிரிச் சொல்லுறன். இனியும் விஷயத்தைப் பின் போடாதையுங்கோ.

மார் : நீ என்ன சொல்லுறாய் சோமு?

சோமு : ஐயா, அந்த மகாலிங்கம் ஐயாதான் மாலதித் தங்கச் சிக்குப் பொருத்தமான மாப்பிள்ளை. ஆனால் தங்கச்சி ஏதோ வித்தியாசமாக நினைச்சுப் பயப்பிடுகுது.

மார் : நீ சொல்லுற சரி சோமு. நான் கூட அப்பிடித்தான் நினைச்சிருக்கிறன்.
(டெலிபோன் அடிக்கிறது மார்க்கண்டர் டெலிபோனைக் கையிலெடுத்துக் கொண்டு)
ஹலோ, மார்க்கண்டு ஹியர். என்னது? இப்பதானே இங்கை வந்திட்டுப் போனான் மகாலிங்கம். ஓ..... கள்ளக்கடத்தல் சாமான் வீட்டிலை இருந்ததா.... சரி... நான் எதுக்கும் பொலிஸ் ஸ்டேசனுக்கு வாறன்.... (டெலிபோனை வைத்துவிட்டு)

சோமு : என்ன ஐயா.

மார் : மகானைப் பொலிஸ் பிடிச்சுக் கொண்டு ஸ்டேசனுக்குப் போயிருக்கினமாம். நான் பார்த்திட்டு வாறன்.
(மார்க்ண்டர் வெளியேறுகிறார்)
(மாலதி வெளியே வருகிறாள்)

மால : என்னவாம் சோமு. மகானுக்கு என்னவாம்?

சோமு : அதேன் உங்களுக்கு. நீங்கள்தான் அவரைக் கலியாணம் முடிக்கமாட்டன் எண்டு சொல்லிப் போட்டியளே?

மால : சொல்லு சோமு, என்ன நடந்ததாம்?

சோமு : உங்கடை அவரை பொலிசு பிடிச்சுக் கொண்டு போயிருக்காம். ஏதோ கள்ளக் கடத்தல் எண்டு சொல்லிக் கேட்டுது.

மால : நோ... ஒருக்காலும் இருக்காது. மகான் அப்பிடி வேலையளுக்கு போக மாட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோமு : (தனக்குள்) தங்கச்சிக்கு மகானிலை நல்ல விருப்ப மிருக்குது. சும்மா வெளியிலை.... ம்.... ம்... தங்கைச்சி கவலைப் படாதையுங்கோ. இது இந்த ராகு கேது வீடு மாறினதால் வந்த சேட்டை. ஒண்டு கெடுத்துக் கொடுக் குமாம். மற்றது கொடுத்துக் கெடுக்குமாம். பேப்பரிலை படிச்சனான். மகான் ஐயாவுக்கு ஒரு கெடுதலும் வராது. கெடுதல் வந்தால் தான் உங்களுக்கென்ன?

மால : பொத்துவாய்... உனக்கு இதைப் பற்றி விளங்காது.

சோமு : நூற்றுக்கு நூறு உண்மை. உங்கடை அனுபவம் எனக்கு இன்னும் வர இல்லை. எண்டைக்குத்தான் வருகுதோ?

மால : சரி போதும் வாயை மூடு. (அழுகிறாள்)

(திரை)

## காட்சி 7

(சிவப்பிரகாசம் வீடு - செல்லம்மா சிவப்பிரகாசம் இருவரும் கதைத்துக் கொண்டிருக்கின்றனர்)

செல் : மெய்யே பாருங்கோ. இவன் மகானிலை ஆத்திரப் படுறத்துக்கு இந்த ஊரிலை ஆர் இருக்கினம்?

சிவ : ஏன் உன்ரை அண்ணன் ராமலிங்கத்தின்ரை மகன் கணேசன் போதாதே?

செல் : ஆக எங்கடை ஆக்களைக் குற்றம் சாட்டாவிட்டால் உங்களுக்குப் பொழுதே போகாதே. மெய்யே பாருங்கோ, இப்ப தம்பியைப் பிணையிலை விட்டிருக்கினம். இனி வழக்கு வைப்பினமோ?

சிவ : பின்னை கையும் மெய்யுமாய் வீட்டிலை வந்து கடத்தல் சாமான்களைப் பிடிச்சிருக்கிறாங்கள். வழக்கு வைக்காமல் விடுவாங்களே. ஏதோ மார்க்கண்டராலை தான் பிணை யாவது கிடைச்சது.

செல் : ஏன் அவன் கணேசனும் வந்து எவ்வளவோ உதவிகள் செய்தவன் தானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ : அது அவன் தான் தப்புறதுக்கு தன்னிலை சந்தேகம் வராமல் இருக்கிறதுக்கு உதவி செய்யுறமாதிரி நடிச்சவன். மகான் எங்கை போட்டான்.

செல் : அவன் எங்கை போறது கோழிப்பண்ணைக்கை நிப்பான். இல்லாவிட்டால் தோட்டத்துக்குப் போயிருப்பான்.

சிவ : நான் ஒருக்கால் கிணத்தடிக்குப் போயிட்டு வாறன். (உள்ளே போகச் செல்லம்மாவும் தொடர்கிறாள்) (நாய் குலைக்கிறது)

மார் : (வெளியிலிருந்து) சிவப்பிரகாசம்... சிவப்பிரகாசம். ஓய் சிவப்பிரகாசம்.... மிஸ்டர் பிரகாசம்.... என்னகாணும் பண்டிதர் நாய்கள் எங்களை விடமாட்டுதுகள் போலைக் இருக்கு.

பண் : நாய்கள் நன்றியுள்ளவை. தத்தம் கடமையைத் தான் செய்கின்றன. செஞ்சோற்றுக்கடன் கழிக்கின்றன.

மார் : பண்டிதர், நீங்கள் சொல்லுறதை விளங்குறத்துக்கு டிக்சனறிதான் வேணும். நாங்கள் வந்த நேரம் சரி இல்லைப் போலிருக்குப் பண்டிண்ட்.

பண் : இதுவே தகுந்த தருணம். அதோ சிவப்பிரகாச அன்பரின் இல்லக் கிழத்தியார் இன்முகத்துடன் வருகிறார். (செல்லம்மா வெளியே வருகிறார்)

மார் : நாசமறுப்பு... பண்டிதர், அவவைக் கிழவி எண்டு சொல்லி விஷயத்தைக் குழப்பாதையும்.

பண் : ஐயகோ, கிழத்திக்கும், கிழவிக்கும் வித்தியாசம் தெரியவில்லையே.

செல் : வாருங்கோ பண்டிதர் ஐயா, நாங்கள் தம்பியின்ரை கோழிப் பண்ணைக்கை நிண்டனாங்கள். கூப்பிட்டது கேட்க இல்லை. நாய் குலைச்சாப்போலை வந்தனான்.

பண் : மார்க்கண்டு ஐயா அவர்கள் மங்களகரமான செய்தியுடன் வருகை தந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல் : இருங்கோ நான் அவரைக்கூப்பிடுறன். (உரத்து) இஞ்சாருங்கோ. கேட்டுதே.

சிவ : (உள்ளிருந்தபடி) கேக்குது கேக்குது... என்ன?

செல் : பண்டிதர் ஐயாவும்...

பண் : பெஞ்சனியர் ஐயாவும் வந்திருக்கின்றோம்.

சிவ : வாறன்... வாறன்... ஒரு நிமிஷம் இருங்கோ.

பண் : அமர்க... அமர்க

மார் : அமருவம்... அமருவம்....

பண் : அம்மையே, இன்று நாள் நன்று. மங்களகரமான விஷயம் ஒன்று.

செல் : அவரும் வரட்டும் பண்டிதர் ஐயா....

சிவ : வந்திட்டன் வந்திட்டன்....

மார் : வாரும் சிவப்பிரகாசம். விஷயம் எல்லாம் கேள்விப் பட்டிருப்பீர். முறை எண்டு ஒண்டிருக்கு. சம்பிரதாயமாகப் பெம்பிளை வீட்டார் வந்திருக்கிறம்.

சிவ : நீங்கள் என்ன சொல்லுறியள் எண்டு விளங்க இல்லை. (செல்லம்மா உள்ளே போகிறாள்)

பண் : நும் புத்திரன் மகாலிங்கத்துக்கு இவரது புத்திரி மாலதியை திருமாங்கல்யதாரணஞ் செய்து வைப்பதற்கு பெஞ்ச னியர் ஐயா விரும்புகின்றனர்.

மார் : எஞ்சினியர்ஸ், டொக்டர்ஸ், எண்டு எத்தினையோ மாப்பிள்ளைகள் வந்ததுதான். பட் மிஸ்டர் சிவப்பிரகாசம் ஐ லைக் மாகலிங்கம்.

சிவ : அது சரி மார்க்கண்டு ஐயா நீங்கள் பெரிய இடம். அது க்கேற்ற மாதிரி ஒரு இடத்தைப் பேசி முடிக்கிறது தான் நல்லது.

மார் : வட் பெரிய இடம். சின்ன இடம். இப்ப நான் செலக்ட் பண்ணியிருக்கிற இடம் மிகப் பெரிய இடம். ஆம் ஐ றைட் பண்டிதர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண் : தமிழன்றி வேறு மொழியறியோம்.

மார் : மிஸ்டர் சிவப்பிரகாசம், எங்கடை நாட்டுக்கு விசுவாசமாக இருக்கிற இடம்தான் பெரிய இடம். எத்தினையோ பெரிய இடம் இருக்கு, உதாரணமாக எஞ்சினியர்ஸ், டொக்டர்ஸ் நிறைய இருக்கினம். எங்கடை நாட்டுக்கு இவர்களுடைய சேவை நிறையத் தேவை. ஆனால் என்ன நடக்குது தெரியுமா? இந்த நாட்டிலை பிறந்து இந்த நாட்டிலை வளர்ந்து இந்த நாட்டிலை கல்விகற்று டொக்டராகி, என்சினியராகின உடன சொகுசான வாழ்வைத்தேடி வெளிநாடுகளுக்குச் சேவை செய்ய ஓடுகினம். இவர்களை என்னாலை மன்னிக்கவே முடியாது.

சிவ : அப்பிடி வெளிநாட்டுக்கு ஓடாமல் இந்த நாட்டுக்குச் சேவை செய்யிற ஒரு மாப்பிளையை தேடலாந் தானே?

மார் : வெறி சிம்பிள் மிஸ்டர் சிவப்பிரகாசம். ஐ கான் பை வண். ஐ ஹாவ் இனப் மணி. வேண்டிய பணம் இருக்கு. என்னாலை பணம் கொடுத்து ஒரு மாப்பிள்ளையை விலைக்க வாங்க முடியும்.

(செல்லம்மா கையில் இரு கோப்பைகளுடன் வருகிறாள்)

செல் : எலும்பிச்சைப்பழத் தண்ணி கரைச்சுக் கொண்டு வந்திருக்கிறன். குடியுங்கோ.

பண் : இனிப்பான விஷயங்களை பேசிக்கொண்டிருக்கும் இவ் வேளையில் புளிப்பான நீராகாரம் எதற்கு அம்மையே?

செல் : நிறைய இனிப்புப் போட்டிருக்கிறன் புளிக்காது.

பண் : நன்று நன்று அம்மையாரும் அமரலாமே. தாங்களும் இந்தக் கலந்துரையாடலில் அங்கம் வகிப்பது நன்று.

சிவ : பெஞ்சனியர் கேக்கிறன் எண்டு கோவிக்கக் கூடாது, வெளிநாட்டுக்குச் சேவை செய்யப் போறவையில்லை நீங்கள் இவ்வளவு ஆத்திரப்படுறியள். நீங்கள் கூட மலாயாவிலை சேவை செய்திட்டுத் தானே இப்ப இங்கை வந்திருக்கிறயள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார் : நல்ல கேள்வி மிஸ்டர் சிவப்பிரகாசம். இலங்கை தான் நான் பிறந்த நன்னாடு. ஆனால் நான் வளர்ந்தது கல்வி பயின்றது எல்லாம் மலாயாவிலை. அதினாலை தான் அங்கை சேவை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இருந்தாலும் என்னுடைய அந்திய காலத்தையாவது என்ரை தாய்நாட்டுக்குச் சேவை செய்யிறதிலை செலவிட வேணுமெண்டுதான் இலங்கைக்கு வந்திட்டன்.

செல் : சரி இப்ப வந்த விஷயத்தைக் கதைக்க விடுங்கோவன்.

பண் : அம்மையார் கூறுவது மிகப் பொருத்தம்.

மார் : பேசுகிறதென்னம்மா, உங்கடை மகனை எனக்கு நல்லாய்ப் பிடிச்சுக்கொண்டுது. சாதகப் பொருத்தமும் நல்லா யிருக்குது. என்னட்டை நிறையப் பணமிருக்கு. ஒரேயொரு மகள் தான். சீதனம் வீடுவளவு காணிபூமி நகைநட்டு இதைத்தவிர காசாக ஆறு லட்சம் ரூபா தாறன். உங்கடை மகனை என்னுடைய மருமகனாக்குறத்துக்கு ஏதாவது மறுப்புண்டோ?

சிவ : நான் வெளிப்படையாகச் சொல்லுறன். (எல்லோருமே ஆவலோடு பார்க்கிறார்கள்) எனக்கு இந்த கலியாணத்துக்குப் பூரண சம்மதம்

செல் : என்னைப் பொறுத்த வரையிலை நான் இதுக்கு உடனடி யாகச் சம்மதம் சொல்லமுடியாது. நீங்கள் தாற ஆறுலட்சம் ரூபா பெரிசு எண்டு ஆசைப்பட்டு ஓமெண்டு சொல்லுறது லேசு. ஆனால் உங்கடை மகளுக்கு என்ரை மகன் பொருத்தமானவனில்லை.

சிவ : ஏன் பொருத்தமில்லையெண்டு கேக்கிறன்?

செல் : தாயில்லாத பெட்டை உங்கடை மகள்.

சிவ : தாயில்லாத பெட்டையள் கலியாணம் முடிக்கக் கூடாதே?

செல் : இந்த மனுசனுக்கு ஒண்டும் சொல்லமுடியாது. இப்ப நான் மாலதியின்ரை தாயாக இருந்திருந்தால் இதுக்குச் சம்மதிப்பனோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ : ஏன் எண்டுதானையப்பா கேக்கிறன்?

செல் : புதிசாய் என்னத்தைக் கேக்கிறியள். அந்தப் பெட்டையின்ரை வடிவுக்கும் பணத்துக்கும், எங்கடை பிள்ளையெண்டாப் போலை.....

மார் : ஒரு அசடனைக் கட்டி வைக்கிறதோ எண்டு கேக்கப் போறியள்.

செல் : உண்மையை மறைக்க ஏலுமே?

சிவ : ஒரு பெத்ததாய் பேசுகிற பேச்சே இது. செல்லம் எனக்கு ஆத்திரத்தைக் கிளப்பாதை.

செல் : ஓ, ஆறு லட்சம் சீதனம் எண்ட உடனை நீங்கள் வாயைப் பிளப்பீங்கள் எண்டது எனக்குத் தெரியுந்தானே.

சிவ : என்னணை செல்லம் இன்னொருக்கால் திருப்பிச் சொல்லு பாப்பம். நீ எத்தினை லட்சம் சீதனமாய்க் கொண்டு வந்தனி. உழைக்கிறதெல்லாம் தருமம் செய்யுறனடி.

செல் : இப்ப அதை நான் இல்லையெண்டு சொல்லுறனே. அது தானே ஊரிலை எல்லாரும் வள்ளல் எண்டு கொண்டாடு கினம்.

சிவ : அப்பிடி இருக்க காசுக்கு ஆரைப்பட்டவன் எண்டு சொல்லுறாய் என்ன, நான் நெடுகப் பாத்துக் கொண்டு தான் வாறன். எனக்கும் சடைமாடையாய் உன்ரை எண்ணங்கள் விளங்கும் கண்டியோ?

பண் : ஏன் இந்த வீண் வார்த்தைகள் வள்ளலே?

மார் : அம்மா, மகாலிங்கத்தைப் பற்றி நீங்கள் ஒருத்தரும் சரியாகப் புரிஞ்சுகொள்ள இல்லை. அவன் அசடன் இல்லை. அவன் ஒரு அசடனாயிருந்தால், அவனை என்ரை மகளுக்குக் கட்டி வைக்கவேணும் எண்டு ஆசைப் படுறதுக்கு அவனிலும் பார்க்க நான் அசடனாயிருக்க வேணும்.

செல் : நீங்கள் மட்டுந்தான் அவனைப் புரிஞ்சு வைச்சிருக் கிறியளாக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார் : கண்டிப்பாகச் சொல்லுறன். நான் மகானைப் புரிஞ்சு வைச்சிருக்கிறன். நீங்கள் பெற்றாராக இருந்தாலும் நான் உங்களைவிடக் கூடுதலாக அவனைத் தெரிஞ்சு வைச்சிருக்கிறன்.

செல் : சரி அதுக்குமேலை நான் மறுப்புச் சொல்ல ஏலாது. இனி உங்கடை விருப்பம்.

மார் : அப்பிடி மொட்டையாய்ச் சொன்னால் எப்பிடி. நாங்கள் பெம்பிளை பக்கத்தார். சீர்வரிசை எல்லாம் சிறப்பாகச் செய்யவேணும். சீதனம் நான் சொன்னபடி தருவன்.

சிவ : பென்சனியர், உங்களை எங்களுக்கு வடிவாகத் தெரியும். ஏன் திருப்பித் திருப்பிக் கதைப்பான். எங்களுக்குச் சம்மதம். நாளைக் குறியுங்கோ.
(மகாலிங்கம் வீட்டினுள் இருந்து வருகிறான்)

மகா : மாப்பிள்ளை இல்லாமல் கலியாணமோ, அப்ப நடத்து ங்கோவன் பாப்பம்.

மார் : மகான் நீ என்ன சொல்லுறாய்?

மகா : ஹி..... மாப்பிள்ளையின்ரை தாய்தகப்பன் சம்மதம் தெரிவிச்சால் போதுமே.

பண் : மகனே, மகாலிங்கம், நும் சம்மதத்தை யாம் தெரிவித்து விட்டோமே.

மகா : பண்டிதர் ஐயா, எனக்கு விருப்பம் இருந்தாலும் சம்பிர தாயத்துக்காக என்னைக் கேட்கத்தானே வேணும்.

மார் : மகான் சொல்லுறது முழுக்கச்சரி. தம்பி மகாலிங்கம், விஷயம் முழுதும் உனக்குத் தெரியும். உனக்கும் மால திக்கும் கலியாணம் முடிச்சு வைக்கிறதாக நாங்கள் எல்லாரும் தீர்மானிச்சிட்டம்.

மகா : ஹி.... நீங்கள் கதைச்சுக் கொண்டிருந்ததெல்லாம் நானும் கேட்டுக் கொண்டு தானிருந்தனான். திருப்பிச் சொல்லத் தேவையில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார் : அப்ப சரி, உனக்கு இந்தக் கலியாணத்துக்குச் சம்மதந் தானே.

மகா : மன்னிக்கவேணும், உங்கடை மகள் மாலதியை நான் காதலிச்சது உண்மை. கலியாணம் முடிக்க ஆசைப்பட்டது உண்மை. ஆனால் இப்ப சொல்லுறன், மாலதியை நான் கலியாணம் முடிக்கச் சம்மதிக்கமாட்டன்.

சிவ : என்னடா மகாலிங்கம்.

மார் : மகான் என்ன தம்பி இது?

செல் : நான் தான் சொன்னனே.

மகா : ஹி... என்னை ஒரு அசடு எண்டு.

மார் : அப்ப நான்தான் உண்மையிலை அசடனா?

பண் : பென்சனியர் ஐயா அவர்களே எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண் பதறிவு அஃதாகப்பட்டது.

மார் : பண்டிதர் எனக்கு ஆத்திரத்தைக் கிளப்பாதையும்.

பண் : மகனே மகாலிங்கம்

மகா : பண்டிதர் ஐயா

பண் : மாலதியை மணப்பதற்கு உனக்குச் சம்பந்தமில்லை என்பது உண்மைதானா மகனே

மகா : நூற்றுக்கு நூறு உண்மை.
(மார்க்கண்டர் வெளியேறுகிறார்)

பண் : பென்சனியர் ஐயா....

சிவ : மிஸ்டர் மார்க்கண்டு... எட மடப்பயலே உன்ரை எண்ணப் படி எல்லாம் ஆடினன். இப்ப எல்லாத்தையும் கெடுத்துப் போட்டியேடா. உன்னைப் பெத்த நேரம் ஒரு அம்மிக் குழவியைப் பெத்திருக்கலாமே.

மகா : நான் வேண்டாமெண்டு சொன்னனானே. ஏதோ நீங்கள் கஷ்டப்பட்டுக் பெத்ததுமாதிரிக் கதைக்கிறியள். அம்மா சொன்னாலும் பறவாயில்லை. என்னம்மா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல் : பொத்தடா வாயை.

சிவ : டேய் என்ன கதைக்கிறது ஆரோடை கதைக்கிறது எண்டு ஒரு நாசமறுப்பும் தெரியாது உனக்கு.

மகா : அதுதான் எல்லாரும் சேர்ந்து என்னை அசடு எண்டு சொல்லுறியளே பிறகென்ன?

சிவ : வாய் திறந்தியெண்டால் பல்லு முப்பத்திரண்டும் கொட்டிப் போடுவன்.

மகா : முப்பது பல்லுத்தான் ஐயா இருக்கு. இரண்டு புழு அரிச்சுப் போட்டுது.

சிவ : பொத்தடா வாயை.

மகா : அது கொடுப்புப் பல்லுத்தான் புழு அரிச்சது. நான் வாய் திறந்தாலும் வெளியிலை தெரியாது.

சிவ : இப்ப கதைக்கப் போறியோடா?

மகா : இப்ப ஏன் நீங்கள் துள்ளுறியள்.

சிவ : டேய் இப்பிடி ஒரு நல்ல இடம், அதுகும் ஒரு லட்சத் தோடை கிடைக்குமே. கஷ்டப்பட்டு வேர்வை சிந்திப் படிப்பிச்சன். உத்தியோகம் வந்தநேரம் உதறித் தள்ளினாய்.

மகா : உத்தியோகத்தனை விடக் கூட உழைக்கிறன் தானே. என்ரை உழைப்பு நாளைக்கு ஒரு ட்ராக்டராக வீட்டுக்கு வரப்போகுது.

சிவ : அதுக்கு வலிய வாற சீதேவியை காலாலை உதைச்சுத் தள்ளுறதே?

மகா : உங்களுக்கு ஆறு லட்சம் தானே வேணும். இன்னும் ஒரு வருஷத்துக்கிடையிலை உழைச்சுத்தாறனே.

சிவ : டேய் விசரா, காசு எனக்குப் பெரிசில்லையடா, இப்ப என்னத்துக்கு அந்தப் பெட்டையை வேண்டாமெண்டு சொன்னனி?

மகா : ஆறு லட்சத்துக்காகத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ : நீ என்னடா சொல்லுறாய்?

மகா : காசுக்கு அடிமையாக நான் விரும்ப இல்லை. இந்தச் சீதன வழக்கமும் எனக்குப் பிடிக்க இல்லை. ஐயா பென்ச னியர் மார்க்கண்டர் உழை காசுதானே ஆறு லட்சம். அதுமாதிரி நானும் உழைச்சுக் காட்டுறன்.

சிவ : டேய் தம்பி, நீ உழைக்க மாட்டாய் எண்டு நான் சொல்ல இல்லை. சீதனமாய் வாற பணத்தை சீ எண்டு தள்ளக் கூடாதடா.

மகா : அது மாத்திரமில்லைக் காரணம். மாலதிக்கு என்னைக் கலியாணம் முடிக்க விருப்பமில்லை. வற்புறுத்தல் கலியாணத்துக்கு நான் சம்மதிக்கமாட்டன். ஐயா, நான் மாலதியை விரும்பினது உண்மை. காரணம் அவளின்ரை பணத்துக்கோ அழகுக்கோஅல்ல. அவள் என்னை விரும் புறதாகச் சொன்னபடியால்.

சிவ : நீ எக்கேடாவது கெட்டுப்போ, இனி இதைப்பற்றிக் கதைக்கமாட்டன்.

மகா : அதுதான் புத்திசாலித்தனம். இப்பதான் நீங்கள் என்ரை தகப்பன்.

பண் : வாழ்த்துகிறோம் மகனே. நீயன்றோ உத்தம புத்திரன்.

சிவ : வாழ்த்துறீங்களோ, பண்டிதர், நீங்கள்தான் இவனைக் கெடுத்தது.

பண் : அபத்தம் அபத்தம்... சிவப்பிரகாச வள்ளலே. தங்கள் வள்ளல் தனம் எங்குபோய் மறைந்தது. பணத்திற்காகத் தங்கள் புதல்வனை விற்பனை செய்ய எண்ணலாமா?

சிவ : வீடு கொழுத்திற ராசாவுக்கு நெருப்பு எடுத்துக் குடுக்கிற மந்திரி வந்த சேர்ந்தியள். பண்டிதர் நான் என்ன சாகேக்கை பணத்தைக் கொண்டு போகப் போறனே. அல்லது இந்தச் சீதனக் காசை நான் அனுபவிக்கப் போறனே. எல்லாம் இந்த அசட்டுக்காகத்தானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகா : சீதனக் கொடுமை இந்த நாட்டிலை ஒழிய வேணும். சீதனம் கொடுக்க வழியில்லாமல் கிழட்டுக் குமருகளாக இருக்கும் கன்னியரின் கண்ணீரைத் துடைக்க வேணும்.

சிவ : டேய் டேய்.... லெக்சர் அடியாதையடா? நாங்கள் என்ன வலியப்போய் சீதனம் கேட்டனாங்களே. வலியவாற சீதனத்தை ஏன் வேண்டாமெண்டு சொல்லுவான்.

பண் : அந்தக் கவலை எமக்கெதற்கு?

மகா : பண்டிதர் ஐயா, அதுக்கும் எனக்கு வழி தெரியும். மாலதியாக என்னை விரும்பி வந்தால், அவளுடைய சொத்தெல்லாத்தையும் சீதனமாய்த்தாறதுக்குப் பதிலாய் நான் சொல்லுறபடி செய்தால், நான் மாலதியை கலியாணம் செய்யத்தயார்.

சிவ : சரியடாப்பா அதையாவது சொல்லன்.

மகா : சீதனம் குடுக்க வசதியில்லாத காரணத்தாலை கலியாணம் ஆகாமல் இருக்கிற கன்னிப் பெண்களுக்கெண்டு ஒரு புனர்வாழ்வும் நிலையம் தொடங்கி, அதுக்கு அவர் தாற சொத்தையெல்லாம் முதலீடு செய்து உதவுறது. அதுக்கு நானும் மாலதியும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களாக இருப்பம்.

பண் : அவ்வளவு தானே. இதற்கு யாம் ஏற்பாடு செய்வோம். எல்லோரும் கவலையை விடுக.
(ராமலிங்கம் வருகிறார்)

ராம : கணேசன் இங்கை வந்தவனே செல்லம்மா?

செல் : இண்டைக்கு வர இல்லை அண்ணை.

ராம : அந்த நாய் வந்தால் இந்த வீட்டுக்குள்ளை நுளைய விடாதை.

செல் : என்னண்ணை சொல்லுறாய் நீ. அவன் தானே அண்டைக்கு வந்து உதவி எல்லாம் செய்தவன்.

ராம : அவன் உதவி செய்ய வர இல்லை செல்லம்மா. இங்கை என்ன நடக்குதெண்டு மோப்பம் பிடிக்கத்தான் வந்தவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையிலை உன்ரை மகன் ஒரு தங்கப்பவுண். கணேசன் ஒரு களிசறை நாய். அவன்தான் கடத்தல் சாமான்களை இங்கை கொண்டு வந்து வைச்சு மகாலிங்கத்தை கள்ள னாக்கிப் பொலிசிலை மாட்டி வைச்சவன். ஆனால் உண்மை எண்டைக்கும் சாகாது. இப்ப நான் அவனைப் பொலிசிலை பிடிச்சுக் குடுக்கப் போறன்.

செல் : அவசரப்படாதை அண்ணை, பெத்த மகனே நீயே பொலிசிலை பிடிச்சுக் குடுக்கப் போறியே?

ராம : இந்த ஒரு நல்ல காரியத்தையாவது நான் செய்ய வேண்டாமே.
(மகான் திடீரென்று வெளியே போகிறான்)

செல் : இவன் மகான் எங்கை திடீரெண்டு ஓடுறான்?

ராம : மகானைப் பற்றி நீ கவலைப்படாதை செல்லம்மா. அவன் காரணம் இல்லாமல் எதையும் செய்ய மாட்டான்.

செல் : இப்ப என்னண்ணை நடந்து போச்சு?

ராம : என்ன நடக்கிறது. கள்ளக்கடத்தல் சமான்கள் கணேசன்ரை அறைக்குள்ளை இருக்கு. இங்கை பொலிசு வந்து பிடிச்ச சாமான்களோடை ஒரு கைலேஞ்சியும் சிலிப்பரும் அகப்பட்டதாம் அது கணேசன்ரை தான். இப்ப பொலிசு அவனைத் தேடுது.

செல் : கைலேஞ்சியிலை ஆர்.கே.எண்ட அடையாளம் இருந்ததாம்.

ராம : ஆர்.கே.எண்டால் வேறை ஆர்.ராமலிங்கம் கணேசன் தானே. இவ்வளவு நாளும் இவன் சுதி பண்ணித் திரியேக்கை நான் கவனிக்காமல் விட்டிட்டன். அது தான் வந்த பிழை, இனியும் இவனைத் திருத்தாமல் விட்டால் ஊருக்கே கெடுதல். இப்ப எங்கையோ தலைமறைவாகி விட்டான். எப்பிடியும் பிடிச்சுக் குடாமல் விடமாட்டன். நான் வாறன். செல்லம்மா தற்செயலாய் கணேசன் இந்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம் வந்தால் ஆளைக்கட்டி வைச்சிட்டு சொல்லி அனுப்புங்கோ வாறன்.
(ராமலிங்கம் போகிறார்)

செல் : அண்ணனுக்கு இப்பிடி ஒரு தறுதலைவந்து வாய்ச்சுதே.

பண் : வள்ளலே, மகான் ஒப்புதல் அளித்து விட்டானன்றோ, நான் பொருத்தமான நாள் ஒன்றை குறித்துக் கொள்ளலாமே.

செல் : நாள் குறிக்கிறதுக்கு மாலதியோடை நான் கதைக்க வேணும்.

சிவ : மாலதி மறுப்பு ஒண்டும் சொல்ல மாட்டாள் அப்பா. எல்லாத்துக்கும் நீ தடைப் பண்ணாதை.

செல் : சொல்லுறன் எண்டு கோவியாதையுங்கோ. இது வெம் பிளையளின்ரை விஷயம். நான் கேட்டுத்தான் ஒழுங்கு செய்ய வேணும்.

பண் : அம்மையே அந்தக் கவலையை விடுக. அந்தப் பொறுப்பை யாம் ஏற்கிறோம்.

செல் : நான் சொல்லுறது அதில்லைப் பண்டிதர் ஐயா... மாலதிக்கு ஏதாவது வசதிக் குறைவு வாற கணக்காய் இருந்தாலும்....

பண் : ஓ ... ஓ... உண்மை.... அம்மையும் எம்முடன் வருக. அங்கேயே சென்று நாளைத் தீர்மானிப்போம்.

சிவ : அது தான் சரி இப்பவே போவம்.

சிவ : பண்டிதரும் செல்லமும் நேரை மார்க்கண்டர் வீட்டுக்குப் போங்கோ. நான் ஒருக்கால் சாத்திரியார் சதாசிவத்தா ரிட்டைப் போயிட்டு அங்கை வாறன்.

செல் : ஏனப்பா, நீங்களும் எங்களோடை வாருங்கோவன்.

சிவ : நான் எது சொன்னாலும் அதுக்கு நீ குறுக்கை பேசாமால் விடமாட்டியே. விஷயம் இல்லாமல் நான் சொல்லுவனே?

செல் : சரி சரி நீங்கள் விஷயகாறன்தான். போங்கோ, பண்டி தரய்யா, நீங்கள் வாருங்கோ நாங்கள் போவோம்.
(போகிறார்கள்)

(திரை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காட்சி 8**

(மார்க்கண்டர் வீடு - சோமு வீடு கூட்டிக்கொண்டிருக் கிறான், அப்பொழுதுதான் மார்க்கண்டர் வருகிறார்)

மார் : சோமு....

சோமு : என்னையா....

மார் : சோமு இண்டைக்கு உன்னை மண்டாடி ஒரு விஷயம் கேட்கப் போறன். நீ மறுக்காமல் அனுமதி தரவேணும்.

சோமு : என்னையா புதினமாய் என்னட்டை அனுமதி கேக்கிறீங்கள். நான் வேலைக்காறன் ஐயா.

மார் : ஸ்டொப் இற். நீ வேலைக்காறன் இல்லையடா சோமு நீயும் என்ரை மகன்தான். தவறு எண்டு தெரிஞ்சு கொண்டும் தவறைச் செய்ய முற்படுகிறன். அதுக்காகத் தான் உன்னுடைய அனுமதி தேவை.

சோமு : சொல்லுங்கோ ஐயா.

மார் : ஒரு சாராயப் போத்தல் எடுத்து வா. வெறும் போத்தல்.

சோமு : ஐயா....

மார் : மறுக்காமல் சொல்லுறதைச் செய் சோமு.
(சோமு உள்ளே போய்ப் போத்திலை எடுத்து வருகிறான்)

சோமு : ஐயா உங்களுக்கு ஒரு சந்தோஷமான செய்தி சொல்லுற துக்குக் காத்துக் கொண்டிருக்கிறன். அதுக்கிடையிலை ஐயா என்ரை மனத்தையே குழப்புறீங்களே.

மார் : என்ரை மனமே குழம்பிப் போச்சேயடா சோமு.

சோமு : என்ன நடந்து போச்சய்யா.

மார் : மாலதி மகாலிங்கம் கலியாணம் நடக்காது போலை யிருக்கடா சோமு.

சோமு : அதைத்தான் ஐயா நான் சொல்ல வாறன். எனக்கும் மாலதித் தங்கைச்சிக்கும் பெரிய போராட்டமே நடந்து கடைசியிலை வெற்றி எனக்குத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார் : போராட்டமா? என்ன போராட்டமடா?

சோமு : மகான் ஐயாவைத்தான் கலியாணம் முடிக்க வேணும் எண்டு நான் சொல்ல, தங்கைச்சி அதுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க, அதுக்கு நான் பல உதாரணங்களைக் காட்டிப் பெரிய மனுசன் மாதிரி புத்திசொல்லப் போக, தங்கைச்சிக்கும் கோபம் வர, நான் சமாதானம் பண்ண, கடைசியிலை இரண்டு பேரும் சேர்ந்து அழ, முடிவிலை தங்கைச்சியும் உண்மையை உணர்ந்து சம்மதம் சொல்லிப் போட்டுது.

மார் : அப்பிடியா வெறிகுட். இப்ப மாலதி எங்கை.

சோமு : கோயிலுக்குப் போயிருக்கு. இப்ப சந்தோஷம் தானே ஐயா போத்திலைக் கொண்டு போகட்டுமா?

(போத்திலை எடுக்கப் போகிறான்)

மார் : சோமு... இந்த காசு. ஒரு போத்தல் சாராயம் வாங்கி வாடா.

சோமு : துக்கத்துக்கும் இது வேணும். இப்ப சந்தோசத்துக்கும் இது வேணும். அதினாலை தான் இந்த உலகத்திலை இந்தக் குடி சாகா வரம் பெற்று வாழ்ந்து கொண்டிருக்குது.

மார் : சோமு.... சோமு... டேய், நான் நொந்து போய் இருக்கிறன். என்ரை மனதை வருத்தாதையடா, இப்பவும் நீ மறுத்தால் நான் தொட மாட்டன்.

சோமு : ஐயா, ஏதோ நடந்திருக்க வேணும். என்னய்யா.

மார் : சோமு, கல்லைக்கண்டால் நாயைக் காணன். நாயைக் கண்டால் கல்லைக் காணன் எண்டது மாதிரி நடந்து போச்சடா.

சோமு : விளங்க இல்லையே ஐயா.

மார் : மகாலிங்கம் இந்தக் கலியாணத்துக்குச் சம்மதிக்க மாட்டன் எண்டு சொல்லிப் போட்டான்.
என்ரை மானமே போச்சடா சோமு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோமு : இதிலை ஏதோ சூழ்ச்சி நடந்திருக்கு. நீங்கள் கவலைப் படாதையுங்கோ. எல்லாம் நான் வெண்டு தாறன்.

மார் : எனக்கு நம்பிக்கை இல்லையடா. எங்கை இன்னும் மாலதியைக் காண இல்லை.
(ராமலிங்கம் அவசரமாக வருகிறார்)

ராம : மிஸ்டர் மார்க்கண்டர். ஆபத்து காணும். பெரிய ஆபத்து.

மார் : என்ன காணும் என்ன ஆபத்து.

ராம : உங்கடை மகள் கோவிலாலை வாற நேரம் பார்த்து ஆரோ காரிலை நடத்திக் கொண்டு போட்டாங்கள் காணும்.

மார் : என்ன.... மாலதி.... (கத்துகிறார்) மகளே மாலதி....

செல் : இப்பிடியே அழுது கொண்டிருந்தால் சரியே. ஆரோ முகமூடி போட்டிருந்தவனாம். பட்டப்பகலிலை இவ்வளவு துணிவாய்க் கடத்திக் கொண்டு போட்டாங்களே.

ராம : இந்த நாளையிலை நகை நட்டுப் போட்டுக் கொண்டு, போறதே ஆபத்து. நகைக்காகத்தான் ஆரோ திட்டம் போட்டுச் செய்திருக்கிறாங்கள்.

செல் : இங்கை நாங்கள் கதைச்சுக் கொண்டிருந்தால் சரியே பொலிசுக்கு அறிவியுங்கோவன். இப்ப மகான் அறிஞ்சான் எண்டால் உயிரை விடப் போறான்.

மார் : எனக்கு மூளையே வேலை செய்ய இல்லை.

செல் : பண்டிதர் ஐயா நீங்கள் எண்டாலும் பொலிசுக்கு அறிவியுங்கோ.

மார் : டெலிபோனிலை சொல்லுங்கோ பண்டிதர்.

பண் : ஊர்காவல் நிலையத்தின் தொலைபேசி எண் என்னவோ?

மார் : ரூ.... ரூ.... ரூ....

பண் : தமிழாக்கம் தேவை.....

மார் : இரண்டு இரண்டு இரண்டு காணும். டெலிபோனை எடுத்து

பண் : ஊர்காவல் நிலைய அதிகாரி அவர்களே. பண்டிதர் பரமலிங்கம் ஆகிய யாம் பென்சனியர் மார்க்கண்டு ஐயா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது இல்லத்திலிருந்து பேசுகின்றனம் மார்க்கண்டு ஐயாவின் வயது வந்த செல்வப்புத்திரி மாலதியை முகமூடியணிந்த யாரோ கடத்திச் சென்று விட்டனராம். உடனே வருகை தரவேண்டும். ஐயா ஏன் மௌனமாக இருக்கின்றீர்கள்? ஊக்காவல் ஐயா.... ஊர்காவல் ஐயா.....

மார் : என்ன பண்டிதர், இன்ஸ்பெக்டர் வாறாராமே?

பண் : பதில் மொழி காணோம்.

மார் : இங்கை கொண்டு வாரும்.... (டெலிபோனை கையில் வாங்கி) ஹலோ.... ஹலோ.... ஹலோ.. ஹலோ... டெலி போன் அவுட் ஒப் ஓடர் போலை இருக்கு. (சிவப்பிரகாசம் வருகிறார்)
ஆரோ திட்டம் போட்டுச் செய்திருக்கிறாங்கள். என்ரை மானம் மரியாதை எல்லாம் போச்சு. இதெல்லாம் போனாலும் பரவாயில்லை பண்டிதர். என்ரை மகளும் போயிட்டாள். நான் ஆருக்கு என்ன துரோகம் செய்தனான்?

சிவ : மார்க்கண்டர், கவலைப்படாதையுங்கோ. எல்லாப் போலிஸ் ஸ்டேசனுக்கும் அறிவிச்சு இருக்கு. மகள் கிடைச்சிடுவாள்.

மார் : உயிரோடை கிடைப்பாளோ? கிடைச்சாலும் மானம் போயிடுமே சிவப்பிரகாசம். இப்ப நான் என்ன செய்ய? மகான் எங்கை.

சிவ : மகானைத்தான் காண இல்லை.

செல் : மகான் எங்கை போயிருப்பான் அப்பா....

ராம : ஒரு வேளை மகான்தான் சும்மா வேடிக்கையாக இப்பிடிச் செய்திருப்பானோ. மாலதியும் சேர்ந்து.

மார் : நோ... நோ... ஒருநாளும் மகான் அப்பிடிச் செய்ய மாட்டான். சோமு நான் சொன்னதைச் செய்யடா. என்னாலை தாங்க முடியவில்லை. போ சோமு.....

சோமு : வேண்டாம் ஐயா.... நான் பொலிஸ் ஸ்டேசனிலை போய் என்ன நடந்திருக்கெண்டு பாத்திட்டு வாறன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார் : இல்லை சோமு, நீ வீட்டிலை இரு. நாங்கள் போயிட்டு வாறம்.

(சோமுவைத் தவிர மற்றவர்கள் வெளியேறுகிறார்கள்)

சோமு : எல்லாரும் என்னைத் தனிய விட்டிட்டுத் தங்கடை தங்கடை முக்கியத்துவத்தைக் காட்டப் போயிட்டினம் இப்ப நான் இங்கையிருந்து என்ன செய்யிறது? என்னாலையும் நிம்மதியாக இங்கை இருக்க முடிய இல்லையே. நானும் வீட்டைப் பூட்டிப் போட்டு என்ரை கெட்டித்தனத்தையும் காட்ட வேணும். நானும் பொலிசுக்கே போவம்.

(திரை)

**காட்சி 9**

(இடம் : ஒரு காட்டுப் பகுதி. முகமூடி அணிந்த கணேசன் அதைக் கழற்றியபடி மாலதியுடன் கதைத்துக் கொண்டிருக் கிறான்.)

கணே : எப்பிடியடி மாலதி என்ரை கெட்டித்தனம். இப்ப என்ன சொல்லப் போகிறாய். மரியாதையாக என்னைக் கலியாணம் முடிச்சு சந்தோஷமாக ராணி மாதிரி வாழப் போறியோ. இல்லை அனாதைப் பிணமாக இந்தக் காட் டுக்குள்ளை கிடந்து அழுகப் போறியோ?

மாலதி : டேய் கணேஷ், ஒரு பொம்பிளைக்கு மானந்தான்ரா பெரிசு. தனியாகக் கோயிலாலை வந்த என்னைக் கடத்திக் கொண்டு வந்து கெட்டித்தனம் பேச உனக்கு வெக்க மாயில்லையே. நீயும் ஒரு ஆம்பிளையா?

கணே : பேசடி பேசு. மாலதி, நானும் நல்லவன் தான்ரி. என்னைக் கெட்டவனாக்கினது நீ தான் உன்ரை அழகுதான் என்னைக் கெட்டவனாக்கினது. இந்த அழகிக்குப் பொருத்தமானவன் நான்தான். அநியாயமாக அந்த அசடன் மகாலிங்கத்தைக் கட்டி உன்ரை வாழ்க்கையே பாழாகப் போகுதே எண்ட நல்ல எண்ணம் தான் என்னைக் கெட்டவனாக்கினது. இண்டைக்கு உனக்காக நான் ஒரு கடத்தல்காரனாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறினன். ஏன்? உன்னை நல்லபடி வைச்சுக் காப்பாத்தா, நாலு பேர் மதிக்க வாழ: இஞ்சை பார் பத்தாயிரம் ரூபா பணமாக இருக்கு. என்னைக் கடத்தல்காரனாக்கினாய்: கெட்டவனாக்கினாய்: தயவு செய்து கொலை காரனு மாக்கிப் போடாதை. மாலதி, நான் நல்லவன் மாலதி, என்னை நம்பு.

மாலதி : பணத்தை எனக்குக் காட்டி இணங்க வைக்கப் பாக்கிறியா. எங்களிட்டை இல்லாத பணமா? கணேஷ் ஒண்டு சொல்லுறன். நான் இனி உயிரோடை இருந்தும் ஒரு பயனும் இல்லை. நீ நல்லவனாக இருந்தால் தயவு செய்து எனக்கு ஒரே ஒரு உதவி செய்.

கணே : சொல்லு மாலதி சொல்லு என்ன உதவி செய்ய வேணும். உனக்குச் செய்யாத உதவியை வேறை ஆருக்கு நான் செய்யப் போறன்?

மாலதி : அப்படி எண்டால் என்னைக் கொலை செய்துபோடு.

கணே : மாலதி, என்னைப் பைத்தியக்காறனாக்காதை. என்னலை என்ன குறை இருக்கு. நான் அழகில்லையே. என்னட்டைப் பணமில்லையோ. என்னை ஏன் கலியாணம் முடிக்க மாட்டன் எண்ணுறாய்.

மாலதி : ஒரு பெண் ஒருத்தனைத்தான் மனத்தாலை விரும்ப முடியும். நான் மகாலிங்கத்தைத் தவிர என்ரை மனதிலை வேறை எவரையும் நினைக்க இல்லை.

கணே : பொய், முழுப்பொய். உன்ரை டிடியிட்டை மகாலிங்கத்தைக் கலியாணம் முடிக்க மாட்டன் எண்டு நீ சொன்னதை நான் பலமுறை கேட்டிருக்கிறன்.

மாலதி : உண்மை. அது என்ரை அறியாமை கணேஷ். அவரைப் பற்றி நான் கொண்டிருந்த தப்பபிப்பிராயத்தாலை அப்பிடிச் சொன்னது உண்மைதான் முதலிலை நான் அவரைக் கேலி செய்யுற எண்ணத்தோடை தான் உங் களைத்தான் கலியாணம் கட்டுவன் எண்டு அவரிட்டைச் சொன்னன். நான் கேலி பண்ணுறன் எண்டதை அறியாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் என்னை மனதார விரும்பினார். அந்த அன்பு தெய்வீகமானது. அவர் ஒரு பைத்தியம் எண்டு தான் முதலிலை நினைச்சன். ஆனால் அவர் ஒரு பெரிய அறிவாளி எண்டதை போகப் போகத்தான் என்னாலை உணர முடிஞ்சிது. நீங்கள் எல்லாரும் நினைக்கிறது மாதிரி மகான் வெறும் அசடன் இல்லை. அவர் அழகில்லாமல் இருக்கலாம். அவர் ஒரு மனித தெய்வம். புனித ஜென்மம். அவற்றை மனத்தை நான் புண்படுத்திப் போட்டன். அதுக்குக் கிடைச்ச தண்டனை தான் இது.

கணே : அப்பிடியெண்டால், நான் உன்னிலை வைச்சிருக்கிற அன்பு வெறும் போலி எண்டு நம்புறியா?

மாலதி : நம்புறதென்ன, அதுதான் உண்மை. நீ ஒரு மிருகம். அதுகும் பயங்கர மிருகம்.

கணே : நீ ஒரு ஆணவம் பிடிச்சவள்: பணத்திமிர்: அதினாலை தான் இப்பிடிப் பேசுறாய். உனக்காக நான் படுற வேதனை உனக்குத் தெரியாது.

மாலதி : நல்லாய்த் தெரியுமடா. உன்ரை வேதனை, ஆடு நனை யுறதைப் பார்த்து ஓநாய் அடையுற வேதனை.

கணே : கடைசியாக நீ என்ன சொல்லுறாய் இந்த இடத்துக்கு வந்து உன்னை ஒருதரும் காப்பாற்றப் போறதுமில்லை. காப்பாற்றவும் முடியாது.

மாலதி : அதுகும் எனக்கு நல்லாய்த் தெரியும். ஆனால் என்ரை மானத்தையாவது காப்பாற்றிக் கொள்ள எனக்கு வழி தெரியும்.

கணே : ஓகோ, அது உன்னாலை முடியாது. எடியே மாலதி நானும் சாகத் துணிஞ்சிட்டன். அதினாலை சாகிறதுக்கு முந்தி உன்னை அனுபவிக்காமல் விடமாட்டன். மாலதி, நல்லாய் யோசிச்சுப்பார். இனி நீ திரும்பிப் போனாலும், அந்த அசடன் கூட உன்னை ஏற்றுக் கொள்ள மாட்டான். வீணாக ஏன் உன்ரை வாழ்க்கையைப் பாழாக்குறாய். உன்ரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மதத்தோடை உன்னை அடையுறதைத்தான் நான் விரும்புறன். என்ன சொல்லுறாய்?

மாலதி : கணேஷ், மரியாதையாய் சொல்லுறன். என்னை நீ கொலைகாறியாக்காதை.

கணே : என்னடி வெருட்டுறாய். வாடி.
(கையைப் பிடித்து இழுக்கிறான்)

மாலதி : தொடாதை என்னை தொடாதை விடடா கையை. (கையை உதறி விடுகிறாள்)

கணே : உனக்கு அவ்வளவு திமிர் இருக்கோ. பெரிய வீராங்கனை.
(மீண்டும் கையைப்பிடித்திழுக்கப் போக மாலதி கன்னத்தில் அறைந்து விடுகிறாள். இருவருக்கும் போராட்டம் நடக்கிறது. அப்பொழுது ஒரு கருக்கு பனம் மட்டையை வாள் போல் உயர்த்திக் கொண்டு கணேச னைத் தாக்க முற்படுகிறாள். கணேசன் சற்றோ பின் வாங்கும் பொழுது பின்னாலிருந்து வந்த மகாலிங்கம் கணேசனின் தலையில் தடியொன்றினால் தாக்கி விடுகிறான். கணேசன் அப்படியே தரையில் சாய்ந்து விழுகிறான்.)

மாலதி : (ஆச்சரியத்துடன்) மகான்.....

மகா : டேய் கணேஷ், இப்ப என்னடா சொல்லுறாய்?

மாலதி : மகான், என்னாலை நம்ப முடியவில்லை. படங்களிலை வாறது மாதிரி, நீங்கள் எப்படி வந்திங்கள்?

மகா : நானும் உங்களோடை தான் காரிலை வந்தனான் பின் னாலை டிக்கியிலை இருந்து வந்தனான்.
(கணேசன் மெதுவாக எழுந்து கத்தி ஒன்றை உருவி எடுத்துக் கையில் வைத்துக் கொண்டு)

கணே : டேய் மகான், விசர்ப்பயலே நீ பெரிய கதாநாயகன் ஆகிவிட்டாய் என்ன? டேய், நானும் மாலதியும் ஒண்டா கச் சாகவேணும் எண்டு ஆசைப்பட்டனான். ஆனால் அதுக்கு முந்தி உன்னையும் கொல்லவேண்டிய நிலைமை வந்திட்டுது. இனி நீங்கள் தப்பவே முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இருவருக்கும் சண்டை நடக்கு பொழுது ஒரு கார் வந்து நிற்கும் சத்தத்தைத் தொடர்ந்து ராமலிங்கம் உள்ளே ஓடி வருகிறார். மகாலிங்கத்துக்கு விழ வேண்டிய கத்திக்குத்து ராமலிங்கத்துக்கு விழுகிறது. இவர்களைத் தொடர்ந்து செல்லம்மா, பண்டிதர், சிவப்பிரகாசம், மார்க்கண்டர் ஆகியோர் மேடைக்கு வருகின்றனர்)

செல் : ஐயோ என்ரை அண்ணை

மார் : மாலதி, மகளே நீ இன்னும் உயிரோடை இருக்கிறியா? (மாலதி குலுங்கிக் குலுங்கி அழுகிறாள்)

ராம : மச்சான் சிவப்பிரகாசம், இவன் உங்களைப் பேய்க் காட்டிப்போட்டு ஓடி விடுவான். பிடிச்சுக் கட்டி வையுங்கோ.

மகா : வேண்டாம் மாமா. இனி அவன் ஓடமாட்டான்.

ராம : அவன் ஓடாவிட்டாலும் என்ரை கடமையை நான் செய்ய வேணும். அவனைப் பொலிசிலை பிடிச்சுக்குடுக்க வேண்டியது என்ரை கடமை.

கணே : அந்தக் கஷ்டம் உங்களுக்கு வேண்டாம் ஐயா. என்னு டைய முடிவை இன்னும் கொஞ்ச நேரத்திலை நீங்கள் எல்லாரும் பார்க்கப் போறியள். அதுக்கு முந்தி மாலதிக் கும் மகாலிங்கத்துக்கும் இந்த இடத்திலையே கலி யாணத்தை முடிச்சி வையுங்கோ.

செல் : நீ என்னடா சொல்லுறாய். இந்தக் காட்டுக்குள்ளேயே கலியாணம் நடக்கிறது.

மகா : காட்டுக்குள்ளை கலியாணம் நடக்கிறதை நான் வர வேற்கிறன் எனக்கும் மாலதிக்கும் சிக்கனமாகக் கலியாணம் நடக்க வேணும் எண்டு ஆசைப்பட்டன்.

பண் : சிக்கனத் திருமணங்களை யாமும் வரவேற்கிறோம். ஆயி னும் மணமக்கள் மாலையாவது மாற்றிக் கொள்ள வேண்டாமா?

கணே : அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம். நான் எல்லாம் றெடியாய்த்தான் வந்திருக்கிறன் அது இவர்களுக்குப் பயன்படட்டும். காருக்குள்ளை இருக்கு எடுத்துவாறன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராம : சாட்டுச் சொல்லிப் போட்டு ஓடப்போறான். ஆளைப் பிடியுங்கோ.

(பண்டிதர் கணேசனைப் பிடிக்க முயலுகிறார்).

மகா : வேண்டாம். அவனைக் தடுக்க வேண்டாம். ஓடித் தப்பினால் பறவாயில்லை. விடுங்கே பண்டிதர் ஐயா..

(கணேசன் போகிறான்)

மார் : அப்ப என்ன இங்கைதான் கலியாணம் நடத்திறதெண்டு தீர்மானமாயப் போச்சோ?

பண் : அதில் தவறேதுவும் இருப்பதாக எமக்குத் தோன்ற வில்லை.

கணே : மாமி, நாள் நட்சத்திரம் பார்த்துத்தான் நான் இண்டைக்கு இந்த வேலையைச் செய்தனான். முகூர்த்த நேரமாகுது. இந்தாருங்கோ மாலையை மாத்துங்கோ.

(மாலதியிடம் ஒரு ட்ரான்சிஸ்டர் ரேடியோவைக் கொடுத்து விட்டு மாலைகளை எடுத்துக்கொடுக்க, மாலதி ரேடியோ வைப் போட நாதஸ்வரம் ஒலிக்கிறது. அப்பொழுது மகாலிங்கம் மாலதி இருவரும் மாலை மாற்றிக் கொள் கின்றனர்?

கணே : ஆகா பொருத்தமான நேரம்.

மகா : அம்மா உமக்குப்பின்னாலையும் ஒரு பொம்பிளை வரு வாள் எண்டு நினைக்கிறீரோ எண்டு கேட்ட நீங்களெல்லே. இங்கை பாத்தீங்களே எனக்குப் பின்னாலை மாலதி.

செல் : போடா, அசடு. எந்த நேரம் என்ன கதைக்கிற தெண்டு தெரியாது.

மாலதி : (பொய்க் கோபத்துடன்) மாமி, எனக்கு முன்னாலை இவரை ஒருத்தரும் அசடு எண்டு சொல்லக் கூடாது.

செல் : என்ரை ஆத்தை அதுக்கிடையிலை உரிமை கொண்டாடத் துவங்கிட்டியே பிள்ளை?

முற்றும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுவையின் வேடங்கள் சில...






உடுவை எஸ். தில்லைநடராஜா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடுவையின் நூல்கள் சில...























உடுவை எஸ். தில்லைநடராசா

Printed by Kumaran Press (Pvt) Ltd 0112 364550

விலை ரூபா 120.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org